பிரபவ ௵ மலர் 1

வைகாசி-ஆனி ௴ இதழ்கள் 2, 3.

167

# ஏல விவசாயி

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
1-NOV 1927

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை.

THE

# CARDAMOM PLANTER,

THE ORGAN of The Travancore Cardamom Planters' Association.

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

# பொருள் அடக்கம்.


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | வேண்டும் | 33 |
| 2. | புரூக் பாண்ட் கம்பெனி | 34 |
| 3. | மதிப்புரை | 38 |
| 4. | பத்திரிகை படிப்பதாலாகும் பயன் | 42 |
| 5. | சங்கங்களும் அவற்றின் பயனும் | 46 |
| 6. | எனது வேண்டுகோள் | 49 |
| 7. | ஐக்கிய இயக்கம் | 55 |
| 8. | கூட்டுறவு இயக்கம் | 60 |
| 9. | திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம் | 63 |
| 10. | விவசாயப் பழமொழிகள் | 71 |
| 11. | தமிழரும் தாய் மொழியும் | 73 |
| 12. | ஓர் அபிப்பிராயம் | 85 |
| 13. | ஏலம் ஏற்றுமதி செய்யப்பட்ட விபரம் | 87 |
| 14. | திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கமும், அதன் கிளைகளும் | 89 |


## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| அங்கத்தினர் அல்லாதவருக்கு சந்தா | ரூ. | 2—0—0 |
| அயல் நாடுகளுக்கு | ரூ. | 2—8—0 |

குறிப்பு:—

விபரங்கள் எழுதுவோர்கள் தெளிவாக எழுதி அனுப்ப வேண்டும். விஷயங்களுக்கு வியாசதாரிகளே பொறுப்புதாரி.

"ஏல விவசாயி" க்கு அனுபந்தம்.

OFFICE OF THE ... BOOKS
1 NOV 1927
MADRAS

# H. H. ஸ்ரீ சித்திரைத் திருநாள்



திருவாங்கூர் மஹாராஜா அவர்கள்.

# ஏல விவசாயி.

167

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து
வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.


ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?

(பாரதியார்)


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

| மலர் 1 | உத்தமபாளையம். பிரபவ ௵ வைகாசி ௴<br>**1927** ௵ மே-ஜூன் ௴ | இதழ் 2 |
|---|---|---|



N27.1.2-3


## வேண்டும்.

| | |
|---|---|
| மனதிலுறுதி | வேண்டும் |
| வாக்கினிலே யினிமை | வேண்டும் |
| நினைவு நல்லது | வேண்டும் |
| நெருங்கின பொருள் கைப்பட | வேண்டும் |
| கனவு மெய்ப்பட | வேண்டும் |
| கைவசமாவது விரைவில் | வேண்டும் |
| தனமு மின்பமும் | வேண்டும் |
| தரணியிலே பெருமை | வேண்டும் |
| கண் திறந்திட | வேண்டும் |
| காரியத்தி லுறுதி | வேண்டும் |
| பெண் விடுதலை | வேண்டும் |
| பெரியகடவுள் காக்க | வேண்டும் |
| மண் பயனுற | வேண்டும் |
| வானக மிங்கு தென்பட | வேண்டும் |
| உண்மை நின்றிட | வேண்டும், |

ஆவணக்காப்பக ... சென்னை-600 008.
159606

# புரூக் பாண்ட் கம்பெனி

எதை எழுதலாம் என்று எண்ணினால், ஏல விவசாயத்தைப் பற்றியோ, ஏல விவசாயிகளைப் பற்றியோ, விளைந்த விளைவை விற்பனை செய்யும் விஷயத்தைப் பற்றியோ எழுதாது, ஏல விவசாயிகளுக்கு ஹிமாலயம் போன்றதொரு இடைஞ்சல் இனி வரப் போகிறதென்று பெரிதும் எச்சரிக்கை செய்ய வேண்டியதைப் பற்றியே எழுத வேண்டியிருக்கிறது. ஜனங்களைக் கிளர்ச்சி செய்யும்படி தூண்ட வேண்டிய திருக்கிறது. "சிகிச்சை செய்வதைக் காட்டிலும் தடுப்பதே நல்லது" என்றதொரு அருமையான ஆங்கிலப் பழமொழியுமுண்டு.

ஏல விவசாயிகளுக்கு மிகச் சுருக்கமான தலைவரைக்காடுகளைக்கூடப் பதிவு செய்து கொடுக்க மறுத்துக் கொண்டிருக்கும் சர்க்கார், தன் சொந்தப் பிள்ளைகள் பட்டினியினால் பரிதபித்து, அழுது கொண்டிருக்கும் பொழுது, அயலூரிலிருந்து வந்த ஒரு கொழுத்த, செழித்த, ஆனால் அதிகமாய்ச் சாப்பிட்டதனால் புளியேப்பமுள்ள, பந்து தத்துவமில்லாத ஒரு குழந்தைக்கு விருந்து நடத்துவது போன்று, இப்பொழுது 1,80,000 ஏக்கர் நிலம் தேயிலைக் கிருஷிக்காக புரூக் பாண்ட் என்ற அயல் நாட்டுக் கம்பெனி ஒன்றுக்கு ஏதோ ஒன்றை மட்டும் கவனித்துக் கொண்டு, நாட்டின் நன்மையை நாடாது, வருங்கால நிலைமை



யைக் கவனியாது, கண் மூடித் தனமாகப் பதிந்துக் கொடுக்கத் தீவிரமாக முன் வருவதில் ஏதேனும் இரகசியம் இருக்காமலிருக்காது.

கம்பெனிக்குக் கொடுக்கப்படும் நிலத்தில் 3ல் 1 பங்கு ஜனங்களுக்குக் கம்பெனியின் மேற்பார்வையில் தேயிலைத் தோட்டத்திற்காகக் கொடுக்கப் படுமாம். பூமி கொடுக்கிறது மல்லாமல் திருவிதாங்கூர் கவர்ன்மெண்டார் ஆட்கள் சேகரித்துக் கொடுக்கும் கங்காணியாக வேஷம் போடக் காரணம் ஏதேனும் இருக்க வேண்டும் என்று யோசிக்கத்தான் வேண்டியிருக்கிறது. "நீ அவல் கொண்டுவா, நான் உமி கொண்டு வருகிறேன்; இவைகள் இரண்டையும் ஒன்றாய்க் கலந்து, நாமிருவரும் ஊதி, ஊதித் தின்று கொண்டிருப்போம்" என்பது நாணயமான மோசக்காரர்களுக்கு நாம் வழங்கும் நாட்டுப் பழமொழி. 3ல் 1 பாகம் கொடுக்கும் விஷயம் முற்றும் பொருத்தமானதாக இருக்கவில்லை.

இவ்வாறு பூமி ஏராளமாகத் தேயிலைக் கிருஷிக்காக ஒரு கூட்டத்தாருக்குக் கொடுப்பதால், திருவாங்கூர் சமஸ்தானம் முற்றிலும் எவ்வளவோ பாதிக்கப்படுகிறது. மலைகளில் மரங்கள் அடர்த்தியாக நிற்க வேண்டியது அவசியம். மரங்களிருந்தால், ஜலப் பிரவாகத்தைப் பலவழிகளில் தடுக்கும். இலைகள் அழுகி, உரமுள்ள எருவாகும். சில சிற்றாறுகள், நீரோடைகள் எக்காலத்திலும் வற்றாது ஓடிக் கொண்டிருக்கும். திருவாங்கூரில் நெல் விளையுமிடம் குட்ட நாடு. இக் குட்ட நாட்டை வளமாக்கும் பம்பா நதி உற்பத்தி ஸ்தானத்தில் தேயிலைத் தோட்ட முண்டு பண்ணப் போவதால் பம்பா நதியில் தண்ணீர் வற்றி விடும். இதனால் இன்னும் மணற் குன்றுகள் உண்டாகும். திருவாங்கூர் ராஜ்யம் 1625 சதுர மைல் விஸ்தீரணம். குட்ட நாட்டின் விஸ்தீரணம் 250 சதுர மைல். கொடுக்கப் போகும் நிலமோ 400 மைல். சமஸ்தானத்தில் 42 லட்சம் ஜனத்தொகை. வனங்களை நீக்கி மைலுக்கு 550 பேர் சராசரி வசிக்கிறார்கள். வனங்கள்,

அன்னியருக்குக் கொடுத்திருக்கும் பூமிகள், ரஸ்தாக்கள், ஆறு முதலியவைகளை நீக்கினால், விவசாயத்திற்குள்ள இடம் சராசரி ஒவ்வொருவருக்கும் 34 ஸென்றுகள்தான். வருடந்தோறும் பெருகிவரும் ஜனத்தொகையைக் கவனித்தால் சுருக்கமான காலத்திற்குள் சுதேசிகளுக்கே இடம் காணாது போகும்போலிருக்கிறது. பம்பா நதி வழியாய்ப் படகுகள் யாத்திரை செய்ய முடியாது.

காடுகள் அழிக்கப் பட்டால், மழை அற்பமாகி, சகல வளங்களும் சொற்பமாகி விடும். இப்படியெல்லாம் வனங்கள் நிர்மூலம் செய்யப்பட்டால் பூமி வரண்டு, புல்லும் முளையாது போனாலும் போகும் என்று பயப்பட வேண்டியதிருக்கிறது. மதிகேட்டான் காலைத் திறந்ததின்பயனைப் பொதுவாகத் தேவிகுளம் டிவிஷனுக்கும் அதிகமாக சாந்தம்பாறைப் பகுதிக்கும் முன் மாதிரி மழையில்லாது போய்விட்டதென்று அனுபவமாக அனைவரும் அறிந்த விஷயமாகும்.

இதைப்பற்றி நல்லதொரு கிளர்ச்சி நாடெங்கும் நடைபெறுகிறது. திருவாங்கூர் சட்டசபையிலும் வாதிக்கப்பட்டு, ஏதோ ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அனைவருக்கும் பொதுவான அரசாங்கம் ஏனோ இவ்வாறு ஒருதலைச் சார்பாக இருக்க வேண்டும்! இனியாவது இக்கம்பெனிக்கு அளவிற்கு மிஞ்சிய நேசபாவம் காட்டாமலிருக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்ள நாம் ஆண்டப் படுவோமாக. சர்க்கார் இதற்குச் செவிசாய்க்குமா? தேசபக்தர்களும், தலைவர்களும், செல்வாக்குப் பெற்றவர்களும் இம் முக்கிய விஷயத்தில் திருவாங்கூர் அரசாங்கம் என்ன செய்யப் போகிறதென்று கவனித்து, வேண்டியன செய்வார்களாக.

இவ்வாறு ஐரோப்பியத்தோட்டக்காரர்கள் திருவாங்கூரில் அதிக ஆதிக்கம் அடைந்து விட்டால், திருவாங்கூர் ராஜ்யம் தோட்டக்காரர்கள் ராஜ்யமாகவே (Planters' Raj) விளங்கும்.



இயற்கை வனப்புகளால் அலங்கரிக்கப்பட்ட இலங்கை ஐரோப்பியத் தோட்டக்காரர்களிடம் சிக்குண்டு, தோட்டக்காரர்கள் ராஜ்யமாகவே, நடைபெறுகிறது. ஸ்டிரெயிட் செட்டில்மெண்ட், மலேயா, பிஜி, கயானா, கென்னியா, தென்னாப்பிரிக்கா முதலிய இடங்களில் ஐரோப்பாவிலிருந்து குடியேறினவர்களும், பிழைக்கத் தொழில் செய்யவந்த ஐரோப்பியர்களும் நமது நாட்டார்களுக்குச் செய்யும் கொடுமைகளை இங்கு இப்பொழுது சொல்லச் சமயமில்லை. பின்னால் நமக்கும் என்ன வருமோ? ஆகையால் ஏல விவசாயிகளே, உஜார்! உஜார்!!

ரா. நாராயணஸ்வாமி,

ஆசிரியர்.

## திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்
### விற்பனைக் கமிட்டியின்
### அறிக்கைக்கு
# மதிப்புரை.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம் விற்பனைச் சபையின் காரியதரிசி அவர்கள் அறிக்கையொன்று அபிப்பிராயத்திற்காக அனுப்பியிருந்தார்கள். திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்தும், கிளைச் சங்கங்களிலிருந்தும் வெளி வந்த பல அறிக்கைகளெல்லாவற்றிலும் உயர்ந்தது, போற்றத்தக்கது இவ்வறிக்கையே. ஏல விவசாயிகளின் பூர்வ சரித்திரத்தைப் பற்றியும், விற்பனைக் கமிட்டியின் அதி தீவிரமான, அபார வேலைகளைப்பற்றியும், ஏல விவசாயிகள் இனிச்செய்யவேண்டிய வேலைகளைப்பற்றியும் ஆத்திரத்துடன் சுருக்கமாகச்சொல்லி, விளங்க வைத்து எழுதப்பட்டிருக்கிறது.

சில முகமனுரைகளுடன் வரவு, செலவு கணக்குகளோடு பலவிடங்களிலிருந்து வெளிவரும் அறிக்கைகளைப்போலல்லாது,

“ பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர் செய் நூலாமோ ” என்ற

ஆன்றோர் வாக்குக்கு இணங்க, இது உயரிய கருத்துக்களுடனும், சில சிறந்த ஆலோசனைகளுடனும் கூடிய ஒரு உயர் வியாசம் போன்று எழுதப்பட்டிருப்பதால், ஒருமுறை, இருமுறையல்ல, மும்முறை படித்தேன். சில இரசமான பாகங்களைப் பன்முறையும் படித்தேன்.



ஏல விவசாயிகள் தங்கள் சங்கக் கட்டுப்பாடான விற்பனை முறையால், தங்களுடைய விளைபொருளை நல்லவிலைக்கு விற்பது மெச்சத்தக்கது. சங்கத்தின் நேரான ஆதீனத்தின் கீழ் பம்பாயில் ஒரு விற்பனைக்கடையும், வட இந்தியாவில் பலவிடங்களில் கமிஷன் ஏஜண்டுகளும் ஏற்படுத்தி, இவ்விடத்திய, அவ்விடத்திய ஏலக்காய் வியாபாரிகளுடன் பலவித தொந்திரவுகளைச் சகித்துக் கொண்டு, சரியான, நேரான போட்டி போட்டுக்கொண்டு ஏலத்தை நல்ல விலைக்கு விற்பனை செய்துவருவது இன்னும் மெச்சத்தக்கது. ஆலோசனையற்ற ஏல விவசாயிகளின் ஒற்றுமையின்மை, வியாபாரிகளின் விதண்டாவாதம், வீண் பயமுறுத்துதல், சதியாலோசனை முதலியவைகளுக்கு மத்தியில் இவ்விஷயத்தில் வியாபாரப் பயிற்சியில்லாத இச் சபையார் பாதை தெரியாத அயல்மாகாணங்களில் தீவிரமாக, உண்மையுடன், உறுதியுடன் வேலைசெய்து, ஏலச்சரக்கை இந்த இக்கட்டான காலத்தில் நல்ல விலைக்கு விற்றுக்கொடுத்து, ஏல வியாபாரிகளுக்கு ஒரு நல்ல பாடம் போதித்து, ஏல விவசாயிகளின் கௌரவத்தைக் காப்பாற்றியது ஒவ்வொரு ஏல விவசாயியும் என்றுமே மறக்க முடியாத விஷயமாகும். இவ்விவசாயிகள் அனைவரும் ஒன்றுகூடி எல்லாருடைய சரக்குகளையும் ஒன்றாய்ச் சேர்த்து, விற்றபின் அவரவர்களின் அளவிற்குத் தக்கவாறு பாகித்துக்கொண்டது இங்கு அவசியம் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. சுமார் 20,00,000 ரூ. வரவு செலவு செய்து சரியான, ஒழுங்கான முறையில் கணக்குகள்வைத்து, ஏல விவசாயிகளுக்குள் நம்பிக்கையை உண்டாக்கி, இச்சபையை ஒரு பெரிய ஸ்தாபனமாகச் செய்து, ஏல விவசாயிகளுக்கு வியாபார இச்சையைக் கிளப்பிவிட்ட இச்சபையாருக்கு முக்கியமாக ஏல விவசாய உலகமும், பொதுவாக, வியாபார விஷயத்தில் தற்சமயம் பின்னடைந்திருக்கும் தமிழ் நாடும் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. விளைபொருள்களை உற்பத்திசெய்யப் பல விவசாயிகள் நன்கு அறிகிற, ஆனால் அவைகளை நல்ல விலைக்கு விற்க அறியாத இக்காலத்தில், ஏலத்தை ஏதோ விளைவிக்கவும், இப்பொழுது சங்

சத்தின் மூலமாக ஒற்றுமையின் வலிமையால் நன்றாய் விற்கவும் அறிந்துகொண்டிருப்பது ஏல விவசாயிகள் செய்த வேலையின் பயனேயாகும்.

அறிக்கையில் குறிப்பிட்டிருந்தபடி ஒரு நிரந்தரக்கமிட்டி ஏற்படுத்தி, வேகமாக வேலை செய்ய முன்வர வேண்டும். ஏலவிவசாயிகள் மகசூல்களை விற்பனைசெய்ய ஒரு கம்பெனி அவசியம் என்பதை அறிந்து, எல்லோரும் கூடி ஒரு கம்பெனி திறக்கத் தீவிரமாக உழைக்க முன் வரவேண்டும். இக்கம்பெனியை பல வழிகளில் உபயோகப்படுத்திப் பயனடைய வேண்டும். ஐரோப்பா, அமெரிக்காக் கண்டங்கள் வியாபாரத்தில் சிறந்து விளங்குவதற்குக் காரணம் அவர்கள் கூட்டு வியாபாரமே. மைசூரில் ஏராளமாக உற்பத்தியாகும் சந்தனக் கட்டைகளை ஆதியில் அவர்கள் அனுப்பியது போல் அல்லாது, இப்பொழுது சந்தனத் திராவகமாக, சந்தன எண்ணெயாக அயலிடங்களுக்கு இலாபத்துடன் அனுப்புவதை ஏல விவசாயிகளும் பின்பற்ற வேண்டும். ஏல விவசாயிகளும் ஏல திராவகம (Tincture of Cardamom) அனுப்பும் காலம் வெகு தூரமில்லை என்பதற்குச் சில அறிகுறிகள் தோன்றுகின்றன.

இவ்வறிக்கையின் நடை மிகவும் அழகாக, இனிமையாக, அழுத்தமாக இருக்கிறது. நாட்டுப் பழமொழிகள் அநேகம் ஏற்ற இடங்களில் சரியாக உபயோகப்படுத்தப்பட்டு, விஷயங்களை விளக்கி, வாசகர்களின் கவனத்தைக் கவர்ச்சிக்கத் தக்கதாயிருப்பது இந்த அறிக்கையில் முக்கியமான விஷயங்களில் ஒன்றாகும். வாக்கியங்கள் தோறும் ஆத்திரம் எழுகின்றது; ஆவேசம் உதிக்கின்றது; ஒற்றுமை ஜ்வலிக்கின்றது. உழைப்பின் மணம் கமழுகின்றது. திருவாங்கூர் ஏல விவசாயிகள் அனைவரும் இதைப் பலதடவை படித்து, விஷயங்களை அறிந்து, விவரித்துள்ளது போல் நடக்க ஒற்றுமையுடன் முன் வருவார்களானால், திருவாங்கூர் ஏல விவ





சாயிகள் அதி மேன்மையடைந்து, திருவாங்கூர் சமஸ்தானத்திற்கே திலகம் போல் விளங்குவார்களென்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

போடிநாயக்கனூர் ஜமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ மகாகனம் தங்கிய காமராஜ பாண்டியரவர்களின் அதி மேன்மைபொருந்திய அக்கிராசனத்தின்கீழ் மகா-ள-ள-ஸ்ரீ கனம் ராவ் சாகிப் அழகணன் செட்டியாரவர்களைத் தலைமையாகக்கொண்ட இக்கமிட்டியின் அங்கத்தினர்கள் அனைவரையும் பொதுவாகப் பாராட்டுவதுடன், திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திற்கே மதியூகி மகா மந்திரி போன்றிருப்பவரும், இக்கமிட்டியின் உயிர்போன்றிருப்பவரும், ஏல விவசாயிகள் நன்மையை அல்லும், பகலும், அனவரதமும் எண்ணி, வேலைசெய்துகொண்டிருப்பவரும் ஆன ஒரு சிறந்த தொண்டரின் உண்மை உழைப்பை இங்குக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. இவரின் வேலையே, வேலைக்கே இந்த அறிக்கை என்று சொல்லுவது குற்றமாகாது. இவ்வித உயரிய, உறுதியான உழைப்பாளியை, நல்ல தியாகியை இவ்விற்பனைச் சபைக் காரியதரிசியாகப் பெற்றிருக்கிறது ஏல விவசாயிகள் செய்த தவப்பயனேயாகும். இவர் யார்? இவரே கோம்பை ஜனாப் முகைதீன் பிள்ளை ராவுத்தரவர்கள் என்று சொல்லவும் வேண்டுமோ?

இந்த விற்பனைக்கமிட்டி அங்கத்தினரனைவருக்கும் காரியதரிசி ஜனாப் ராவுத்தரவர்களுக்கும் இப்பெரிய வேலைகள் போன்று பலவற்றைச் செய்யும் பொருட்டு உற்சாகம் ஊட்ட வேண்டியது ஏல விவசாயிகளின் முக்கிய முதற் கடமையாகும். இதுபோன்ற பலவித இயக்கங்களில் ஸ்ரீமான் ராவுத்தரவர்கள் பிரவேசித்து உழைக்கும்படியாக நீண்ட ஆயுளையும், அரோக திடகாத்திரத்தையும், போதிய பொருளையும், தளரா ஊக்கத்தையும் அன்னாருக்கு ஆண்டவன் அளிப்பாராக.

ரா. நாராயணஸ்வாமி;
ஆசிரியர்.

# பத்திரிகை படிப்பதாலாகும் பயன்.

ஓர் தேசம், சமூகம் அல்லது மதம் முன்னேற்றமடைய வேண்டுமானால், அத் தேசவாசிகளோ அல்லது அந்தச் சாதியாரோ பத்திரிகைகளைப் படிப்பவர்களாக இருத்தல் வேண்டும். பத்திரிகை படிக்காதவர்கள் உலகத்தில் நாலா பக்கங்களிலுமுள்ள விஷயங்களை அறிந்துகொண்டு, தங்களுடைய நல உரிமைகளைப் பெருக்கிக்கொள்ள முடியாது. பத்திரிகை படிப்பது, ஒரு கோஷ்டியாருக்கு மாத்திரம் பயனைக்கொடுக்கும் என்பதல்ல. அது தேவாமிர்தம் போன்றது. ஆடவர்களுக்கும், பெண்களுக்கும், வியாபாரிகளுக்கும், முடிவாகச் சொன்னால், உலக மன்பதைகள் சகலருக்கும் மிகவும் உயிர் நாடிபோன்றது. பத்திரிகை படிப்பதானது புத்தியை விசாலிக்கச் செய்து, அறிவை விருத்தி செய்து, பிறருக்கு ஊழியம் புரியும்படி நம்மைத் தூண்டுகின்றது. ஒரு விவசாயியோ அல்லது வியாபாரியோ பத்திரிகை படிப்பதால், தன் தொழில்களை நவீன முறையில் சீர் திருத்தம் செய்து அதிக லாபத்தைச் சம்பாத்தியம் செய்யமுடியும். இன்றேல், முடியாது. உதாரணமாக மேல் நாட்டு வியாபாரிகளையும் ஜனங்களையும் உற்று நோக்குங்கள். நம் நாட்டு வியாபாரிகளின் க்ஷீணதிசைக்கும், நாட்டின் க்ஷீணதிசைக்கும் நம்மவர்கள் பத்திரிகை படிக்காததே காரணமெனக்கூறின் அது மிகைபடக் கூறியதாகாது. நம்மவர்களுக்குப் பத்திரிகை என்றால் பிடிப்பதில்லை. பத்திராசிரியர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக வெள்ளைக் காகிதத்தில் கருப்பு மையால் அச்சிட்டு அனுப்பிப் பணங்களைக் கொள்ளை கொ-



ல்வதாக நினைக்கிறதுடன், மடத்துச் சோம்பேறிகளைப் போல் "இராமன் ஆண்டாலென்ன, இராவணன் ஆண்டாலென்ன? எவன் எப்படியும் போகட்டும்; நமக்குக் கடவுள் இருக்கிறார்; விதிப்படி நடக்கும்" என்று சொல்லி மனம் பூரித்து விடுகிறார்கள்.

முதலில் பத்திரிகைகள் எங்ஙனம் தோன்றியதென்பதைக் கவனிப்போம். நமது நாடு சுதேச மன்னராட்சிக்கு உட்பட்டிருந்த பண்டைக் காலத்தில் பகிரங்கச் சமாச்சாரங்களைத் தண்டோரா மூலமாகவும், பகிரங்கவிடத்திலுள்ள சுவர்களில் எழுதி வைப்பதினாலும் பிரகடனம் செய்து வந்ததாகத் தெரிய வருகிறது. உதாரணமாக, அசோகன் சாசனங்களைக் கூறலாம். இக்காலத்தில் சமாசாரப் பத்திரிகைகள் தோன்றிய அளவை ஆராய்ச்சி செய்யுமிடத்து, முதல் முதல் 19-வது நூற்றாண்டில் ரோமேனியர்கள் "ஆக்டாடி யூர்ணு" அல்லது வென்ஷியன் கெஜட்டாஸ் என்ற பெயரால் சமாச்சார விளம்பரங்கள் எழுதி வெளியிட்டு வந்தனர். ஜூலியஸ் ஸீஸர் காலத்திலிருந்து பல விஷயங்கள் அடங்கிய சமாச்சாரப் பத்திரிகைகள் நடந்து வருவதாய்க் கூறுவர். ஆயினும் 1588ம் வருஷத்தில்தான் முதல் முதல் ஆங்கிலப் பத்திரிகையை லார்டு பர்லி அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதென சரித்திரக்காரர் கூறுகின்றனர். ஆனால் அவர் முயற்சி பெரிதும் பயன் பெறாமல் ஏதோ ஒரு சில பாகத்திற்கு மட்டும் அவருடைய பத்திரிகை உதவி வந்ததாகத் தெரிகிறது. 1522ம் வருஷத்தில் "வீக்லி நியூஸ்" என்ற பத்திரிகையை மிஸ்டர் நாதல் நியல் பட்டர் என்பவரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. அதில் அவர் முதலில் உள் நாட்டு விஷயம், அயல் நாட்டு விஷயம், ஜன சமூக சபை விஷயம், நியாயஸ்தல விஷயம், அரசியல் விஷயம், ஆடல் விஷயம், வியாபாரச் செய்திகள், இதர சம்பவங்கள் முதலியவற்றை மிகச் சிரமப்பட்டு சேகரம் செய்து, பிரசுரித்து வந்தார். ஸ்டுவர்ட் வமிசத்தார் இங்கிலாந்தை ஆண்டுவந்தபோது, அரசாங்க விஷயமாய் யாதொன்றும்

பத்திரிகைகளில் பிரசுரிக்கக் கூடாதென்று கண்டிப்பான அரசாங்க உத்தரவு ஒன்று பிறந்தது. பின்னர் அநேக ஆண்டுகளாய்ப் பத்திராதிபர்கள் அச்சுக்கூடத்திற்குச் சுதந்திரம்வேண்டுமென மன்றாடினார்கள். லைசென்ஸிங் ஆக்ட் என்ற சட்டம் 1695ம் வருஷம் காலாவதியாய்ப் போய்விட்டது. அஃது அக்காலத்தில் அரசாங்கத்தாரால் புதுப்பிக்கப் பட்டமையால், அச்சுக்கூடங்கள் சுதந்தரம் பெற்றன. இடைக்காலத்தில் ஸ்டார் சேம்பரிலிருந்து அதிகாரம்பெற்ற காண்டர்பரி பாதிரியார் இராஜத் துரோகக் குற்றங்களைச் சாட்டி, எங்ஙனம் அச்சுக்கூடங்களைப்பல கொடிய வழிகளில் துன்புறுத்தி வந்தார் என்ற சரித்திரத்தை விரிக்கிற் பெருகும். அச்சுக்கூடங்கள் சுதந்தரம் பெற்ற பின் ஒரு சில பத்திரிகைகளைத் தவிர மற்றவைகள் பிரசுரிக்கப் படாதென அரசாங்கத்தார் கண்டிப்பான உத்திரவிட்டு, மற்றப் பத்திரிகைகளையும் நிறுத்தி விட்டார்கள்.

இங்கிலாந்தில் 1702ம் வருடம் அன்னே மகாராணியார் ஆட்சி செய்யத் தொடங்கியது முதல் அச்சுக்கூடங்கள் பூரண சுதந்தரம்பெற்றன. 1840ம் வருடம் அரசாங்க அறிக்கைகளை சமாச்சாரப் பத்திரிகைகள் பகிரங்கப் படுத்தலாமென ஏற்பட்டது. ஆயினும் பார்லிமெண்டில் பேசும் விஷயங்களைப் பிரசுரிக்கும் விஷயத்தில் பல ஆட்சேபனைகள் ஏற்பட்டன. 18வது நூற்றாண்டில் "மார்னிங் கிரானிகல்" என்ற பத்திரிகையைப் பிரசுரித்து வந்த மிஸ்டர் ஜான்பெரி என்பவரின் அருமுயற்சியால் பத்திரிகைப் பிரதிநிதிகள் சபைக்கு வந்து குறிப்பெடுத்துப் பிரசுரிக்கலாமென அரசாங்கத்தாரால் அனுமதிக்கப் பட்டது. அதுமுதல் இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் உலாவிக் கொண்டிருக்கின்றன.

நாகரீகம் மிகுந்த இவ்விருபதாம் நூற்றாண்டிலுங்கூடப் பத்திரிகைகளுக்குப் பூரண சுதந்திரமில்லை. ஆகவேதான் இந்தியர்களுக்குப் போதிய அளவு தேசாபிமான உணர்ச்சியில்லை.



அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேச வாசிகள் நாகரீகமடைந்ததற்குக் காரணம்? அத்தேச வாசிகள் சிறியோர் முதல் பெரியோர்வரை, ஏழைகள் முதல் தனவந்தர்கள்வரை, பாமரர்கள் முதல் படித்த இராஜ தந்திரிகள்வரை தினசரி, வார, மாதப் பத்திரிகைகளைப் படிக்கத் தவறுவதில்லை. அவர்கள் பத்திரிகை படிப்பதைத் தங்கள் முக்கிய கடமையாகக் கருதுகின்றனர். படிக்கத் தெரியாதவனும் தெரிந்தவனுடைய உதவியைநாடி, தேசீய, இராஜீய விஷயங்களை அறிந்து கொள்கிறான் என்றால் இதைவிட அவர்களின் பத்திரிகாபிமானத்துக்கு என்ன சாக்ஷியம் வேண்டும்? 33 கோடி ஜனத்தொகையைக் கொண்ட இந்தியாவில் எத்தனை பத்திரிகைகள் வெளியாகின்றன? எத்தனை பேர் பத்திரிகாபிமானிகளாக இருக்கிறார்கள்? இந்தியர்களால் நடத்தப்படும் பத்திரிகைகள் எத்தனை என்பதைக் காண மனம் நடுங்குகின்றது. உலகத்துக்கு நடு நாயகமாக விளங்கிய இந்தியர்கள் இன்று மிகவும் தூக்கத்தில் அடிமைப்பட்டுக் கிடக்கின்றார்கள். தினசரி பத்திரிகை படிக்கச் சௌகர்யமும், செல்வமும் படைத்த தனவந்தர்களே கவலையீனமாக இருக்கும்போது, ஏழைகளைப்பற்றி அதிகமாக ஒன்றும் சொல்வதற்கில்லை. $4\frac{1}{2}$ கோடி ஜனத்தொகையைக் கொண்ட இங்கிலாந்தில் ஆயிரக்கணக்கான பத்திரிகைகள் நடைபெறுகின்றனவென்றால், 33 கோடி ஜனத்தொகையைக் கொண்ட இந்தியாவில் எத்தனை பத்திரிகைகள் நடைபெற வேண்டுமென்பதை அறிஞர்கள் சிந்திப்பார்களாக! சென்னை மாகாணத்தை எடுத்துக்கொண்டால், பத்திரிகைகளின் நிலைமை மிகவும் கேவலமாகக் காணப்படுகிறது. எத்தனையோ பத்திரிகைகள் தோன்றி, ஆதரிப்பாரில்லாமல், அதி சீக்கிரத்தில் மறைந்து விடுகின்றன.

எனது அன்புள்ள சகோதர சகோதரிகாள்! இனிமேலாவது உங்கள் நீண்ட தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு, பத்திரிகைகளை ஆதரித்து, நீங்கள் சகல விஷயங்களிலும் முன்னேற்றமடைந்து, பாரதநாட்டுப் பூர்விக நிலைமையை நிலைநாட்டுவீர்களாக!

வ. மி. ஷம்சுதீன் சாஹிப்.

# சங்கங்களும் அவற்றின் பயனும்.

(32-ம் பக்கத் தொடர்ச்சி.)

நம் இந்திய தேசத்தில் சாதிச் சங்கம், சமூகச் சங்கம், சமயச் சங்கம், கல்விச் சங்கம், கைத்தொழிற் சங்கம், வர்த்தகச் சங்கம், விவசாயச் சங்கம், தொழிலாளர் சங்கம், மாதர் சங்கம், வாலிபர் சங்கம் முதலான பலதிறப்பட்ட சங்கங்களுண்டாகி, உழைத்து வருகின்றன. இவைகளில் சில அதிக காலத்திறகு நின்று நிலவித் தங்கடமையை ஊக்கத்துடனியற்றுகின்றன. சில சங்கங்கள் தோன்றிய சில காலத்துக்குள்ளேயே மறைந்து போகின்றன. சங்கங்கள் தம்வேலையை இயன்ற வரை ஊக்கத்துடனியற்றினால், உலகத்திற்குப் பெரும்பய னுண்டாகுமென்பதற்குச் சந்தேகமில்லை.

இதற்கு ஒரு உதாரணமாக புத்த சமயம் விளங்குகின்றது. புத்தபிரான் தாம் போதித்த உண்மையை உலகில் நிலைபெறுத்துவதற்குச் சங்கத்தையே சாதனமாகக் கொண்டனர். புத்த சமயிகள் "சங்கஞ் சரணங்கச்சாமி" என்னும் வாசகத்தை இன்றைக்கும் கூறிவருதலை நாம் காண்கின்றோம். உலகில் அநேகர் புத்த சமயிகளாயிருத்தல் யாவருமறிந்தமையாகும். புத்த சமயம் மேன்மை பெற்று விளங்குவதற்கு புத்தபிரான் சங்கங்கள் அமைத்தமையும் ஓர் காரணமாகும்.

இப்போது நம் இந்திய நாடு சுதந்தரப் போரி லீடுபட்டு நிற்கின்றது. இந்தியா சுதந்திரத்தை அஹிம்ஸா தர்ம முறையிற் பெறவேண்டுமென்பதே மகாத்மா காந்தியடிகளார்தம் நல்லுப



தேசமாகும். சுதந்திரம் அடைய முயற்சிப்பதற்கு அடிப்படையாயுள்ள தொழில் தேசபாஷா விருத்தி, விவசாய விருத்தி, கைத்தொழில் விருத்தி முதலான தேசத் தொழில்களே. நாட்டிலுள்ள ஏழைகள் பலரும் தொழிலில்லாமையால், உணவுக்கும் உடைக்கும் வருத்தமுற்றவர்களாய் அயல் நாடுகளுக்குச் செல்கின்றனர். அயல் நாடுகளிலே இவர்கள் படுங் கஷ்டங்களோ மிகப் பல.

விவசாயமும், கைத்தொழிலுமே நாட்டினைச் சிறப்பிக்கவல்லன. இவற்றை விருத்தி செய்வதினாலேயே நாடு சிறப்படையும். காலத்தின் கோலமாக நம் தேசவாசிகள் பலரும் அந்நியத் துணி, அந்நிய உணவுகள், அந்நிய ஆயுதங்கள் முதலானவைகளிலேயே ஆர்வமுடையாராய் வாழ்ந்து வருகின்றனர். தேசியப் பொருட்களிலுள்ள ஆர்வம் நீங்கவே, தேசியத் தொழில் செய்வோர் பாடு திண்டாட்டமாயிற்று. இதனாலேயே தொழிலாளர்கள் அயல் நாடுகளுக்குச் சென்று அல்லற் படுகின்றனர்.

ஏழைகள் நிலைமை யிங்ஙனமாக, படித்தவரென்னும் வகுப்பினரும், வேலையில்லாத் திண்டாட்டத்தால் வருத்தமடைகின்றனர். கல்விமாத்திரமே பிழைப்புக்குரிய சாதனமெனக் கைக்கொண்டிருப்பதாலேயே, இவர்கள் இந்த நிலைமை அடைந்திருக்கிறார்கள். கல்வியை அறிவைவிருத்தி செய்வதற்குரிய சாதனமாகக் கற்றுக்கொண்டு, பிழைப்புக்குரிய வழிகளாகிய விவசாயம், கைத்தொழில், வியாபாரம் முதலானவைகளைச் செய்து கொண்டால் வேலையில்லாத் திண்டாட்டத்தால் வருந்தவேண்டியதில்லை. கல்வியறிவின் விருத்தியால் தொழில் கிடைக்குமானால், அத்தொழிலை யேற்றுக்கொள்ளலாம். அன்றெனில் விவசாயம், கைத்தொழில் முதலானவற்றையே செய்ய வேண்டும். இங்ஙனமாகவே நம் தமிழ்நாட்டுப் பழந்தமிழ்ப் புலவர்கள், பற்பல தொழில்களையும், தமது பிழைப்புக்காகக் கைக்கொண்டுவந்தனர். இதன் உண்மையை, அப்புலவர்களுடைய நாமங்களால் நன்கு அறிந்து கொள்ளலாம். "மருத்துவன் தாமோதரனார்", "கூலவாணிகன் சாத்தனார்" என்பன முதலிய பெயர்களால் அவர்கள் கைக்கொண்ட தொழில்கள் விளங்குகின்றன. தாமோதரனார் என்பவர்

வைத்தியத் தொழில் செய்தமையால் அப்பெயர் பெற்றார். கூல வாணிகன் சாத்தனார் என்பவர் கூல வியாபாரஞ் செய்தமையால், அப்பெயர் பெற்றனர்.

ஆகவே நம்மவர்களும் கல்வியை அறிவுக்குரிய சாதனமாகக் கைக்கொள்ளுதல் வேண்டுமேயன்றிப் பிழைப்புக்கு மாத்திரமுரியதாகக் கைக்கொள்ளலாகாது. தொண்டையான் ஒருவனிருந்தால், அவனுக்குத் தோட்டி வேலை செய்வதற்கும் ஒருவன் அவசியம் வேண்டியேயிருக்கின்றது. எல்லாரும் தொண்டைமானாகவோ, அன்றித் தோட்டியாகவோ இருக்க முடியாது. பலவிதமான நிலையிலும் மனிதரிருக்க வேண்டியவர்களே.

இந்த ஜன சமூக வாழ்க்கையில், ஜனங்கள் தத்தந் தொழிலில் அபிவிருத்தியடைந்து, சிறப்புற்றிருத்தலே, நாட்டின் உன்னத நிலைமையாகும். இந்த நிலைமையை நமது இந்திய நாடு எய்தும் வரையும் சுயராச்சியமென்பது சொல்லளவிலுள்ள ஒன்றேயாகும்.

தேசியத் தொழில்களில் மிகச் சிறப்பு வாய்ந்தது விவசாயத் தொழிலே. இதனைச் சார்ந்துள்ளதே கைத்தொழிலும், ஆகவே இந்த விவசாயத் தொழிலை யியற்றுதற்குச் சங்கங்கள் முற்பட்டு ஊக்கத்துடனுழைத்தல் வேண்டும். இத்தொழிலை அபிவிருத்தி செய்வதாலேயே இந்தியா தேசம் தனது பூர்வீக உன்னத நிலைமையை எய்தவேண்டியிருக்கின்றது. உணவுக்கும், உடைக்கும், இன்னபிறவற்றிற்கும் அன்னியரை எதிர்பாராமல், தன் உடையும், தன் உணவுமுடுத்துண்டு வாழுமொரு திருநாளென்றோ அன்றே இந்தியத்தாய் சுதந்திரமடைந்த திருநாளாகும்.

இந்தியத் தாய் விடுதலையடைதற்குச் சங்கங்களின் தளரா ஊக்கமே சிறந்த சாதனமாகும். இம் முயற்சியிற் றலையிட்ட "ஏல விவசாயிகள் சங்கம்" சீர் சிறந்து, பொலிந்து, தன் கடமையை யினிதேயாற்றத் திருவருள் பாலிக்கும் வண்ணம் ஈசனிணையடிப்போதுகளை வாழ்த்தி வந்தித்து, இச் சிற்றுரையை நிறைவேற்றுகின்றேன்.

சுபம்.

கமலாசனி அம்மாள்.



# எனது வேண்டுகோள்.

சகோதர ஏலத்தோட்டக்காரர்களுக்கும், ஏலத்தோட்ட மேற்பார்வையாளர்களுக்கும் நான் தெரிவித்துக் கேட்டுக்கொள்வதொன்றுண்டு.

ஏலக்கிருஷி அநுபவத்தில் முதிர்ந்தவனென்றெண்ணி, இப் பத்திரிகையின் வாயிலாக நான் எழுத முன் வந்தேனில்லை. எனக்கு அவை அடக்கத்தில் சிறிது பயிற்சியும், அதிகம் மதிப்பும் உண்டு. என்னைக்காட்டிலும் பல விதங்களில் மேம்பாடடைந்த சில ஏலக்கிருஷிகர்களை நான் நன்கு அறிவேன். அவர்களின் கூட்டுறவிலும் சில காலம் இருந்திருக்கிறேன். அவர்களின் மேலான, அருமையுள்ள அனுபவங்களை ஒவ்வொரு நாளும் 10 நிமிஷநேரம் மட்டும் பிரத்தியேகப்படுத்தி, அதனைச் செவ்வனே ஆராய்ந்து அனுபவித்து அறிந்திருக்கிறேன். அதை ஏலக்கிருஷிக உலகத்திற்கு எடுத்துச் சொல்லத் தாழ்மையுடன் முன் வருகிறேன். ஏலக்கிருஷி எந்த இடத்திற் பலிதமாகும்? எவ்வளவு மழை வேண்டும்? கடல் மட்டத்திற்கு எவ்வளவு உயரத்தில் இருந்தால், செடி அடர்ந்து, காய்த்துப் பலனளிக்கும்? என்ற விஷயங்களை அறியாதபடியே பலரும் தோட்டங்களை விருத்தி செய்வதில் சிரத்தை காட்டுகிறார்கள். இது நிற்க, என்னென்ன முறைகளினால் செடிகளைச் செழுமைப் படுத்தலாம்? எப்படிக் கூடுதல் பலனை அனுபவிக்கலாம்? என்ற நினைப்பே நம்மவரில் பெரும்பான்மையோருக்கு இல்லாதிருக்கின்றது. ஆகையால், அநுபவவாயிலாகத் தெரிந்த விஷயங்களை [illegible] தங்கள் தங்கள் அநுபவங்களை "ஏலவிவசாயி" [illegible]

[illegible]யின் மூலம் பலருக்கும் தெரியப்படுத்தி விவசாயிகளைச் சீர்திருத்த முன்வரும்படி கேட்டுக் கொள்கிறேன். அது போக, என்னைப்போன்ற ஸ்தானத்திலிருக்கும் ஒரு சிலரையும் "ஏல விவசாயி" யின் பக்கத்திலிழுக்க ஆசைப்படுகிறேன். இன்னும், தூக்கத்திலிருந்து அவர்களைத் தட்டி யெழுப்பி, இயற்கையில் அவர்களுக்கென்று பிரத்தியேகப்படுத்தி வைத்திருக்கும் வேலையில் ஈடுபடும்படிசெய்து "நாங்களும் விழித்துக் கொண்டோம். அன்னியரின் உதவி எங்களுக்குத் தேவையில்லை." என்ற தன் மதிப்பை வெளியுலகத்திற்கு எடுத்துக் காட்ட முன் வரும்படி கூவியழைக்கிறேன்.

சகோதரர்களே, ஏல விவசாயம் நம்மைப் பொறுத்தே நிற்கிறது. இந்தியாவின் கதி இந்தியருக்குள் தானிருக்கிறது போல, ஏலச் செடியின் வாழ்வு ஏலக் குடியானவர்களுக்குள் தானிருக்கிறது. மற்ற விவசாயத்தைப்போல இது அங்காங்கு பரவியிருக்கக் காணோம். ஏலச்செடிக்குகந்த பூமி இந்தப் பரந்த உலகத்தில் மிக மிகக் குறைவென்றே சொல்லலாம். மழையிருந்தால், வளமில்லை; வளமிருந்தால், உயரமில்லை; உயரமிருந்தால், வளமில்லை. ஒன்றுக்கொன்று ஒவ்வாது கிடக்கிறது ஆனது பற்றியே ஏலச் செடியை ஆக்கவும், அழிக்கவும் கூடிய சக்தியை இறைவன் நமக்கு அளித்திருக்கிறார். விழித்துப் பாருங்கள்! ஊன்றிப் பாருங்கள்!! சகோதரர்களே, பெரியோர்களே, உலகத்தில் பல வளங்களும் பொருந்திய இந்நாட்டு விவசாயிகளே, விவசாயம், தாவரம் முதலிய சாஸ்திரங்களை மற்றத் தேசத்தார்களுக்குப் புகட்ட நீங்கள் பிறந்தவர்கள். ஏன்? உங்களுடைய உள்ளக்களமே சகல ஆயுதங்களாலும் நிரப்பப்பட்டுக் கிடக்கிறது. நீங்கள் வெளியே போகத் தேவையில்லாதபடி சகல சாதனங்களும் பக்கத்திலேயே யிருக்கின்றன. இப்பொழுதும் தாவரத்தைப் பொறுத்தமட்டில் டாக்டர் போஸை (Dr Sir J. C. Bose) த் தவிர்த்து மேலதிகாரி உலகத்தில் வேறு ஒருவருமில்லையென்று சொல்லி மகிழாத இந்தியரொரு



வருமில்லை. சிக்கனத்தோடு கூடிய லாபகரமுள்ள விவசாயத் தொழில் இந்தியாவில் மட்டும் உண்டு என்று சொல்லத் தயாராயிருக்கும் விவசாய விற்பன்னர்கள் அநேகருண்டு என்று இங்கு அவசியம் குறிப்பிட வேண்டியதிருக்கிறது.

கவனித்துப் பாருங்கள், அந்நிய முறையனுபவங்களைக் கொண்டு, புதிதாய்க் கட்டிய விவசாய இலாகாக் கட்டிடம் அதோ சாய்ந்து நிற்கிறது. அதை ஆதரிக்க ஒரு குடியானவனும் பக்கத்தில் இல்லை. நெடுங் காலமாக விவசாய இலாகா, விவசாய இலாகா என்ற புதுப் பெயரை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதனால் நான் சுற்றிய கிராமங்களில் ஒரு விதப் பிரயோஜனத்தையும் அடைந்ததாகக் கண்டுகொள்ளமுடியவில்லை. நிலத்தைக் கண்டு விதை போட வேண்டும். அப்படியின்றி புளியவிதையை மலையில் விதைத்தால், தரைப் பூமியில் ஏலத்தை நட்டால் என்னதான் பலன் கிடைக்கும்! என்னே நம்முடைய கவலையின்மை! என்னே நம்முடைய அறியாமை!

மனிதன் மாயையினால் கட்டுண்டு உண்மையை யறியாதபடி, மயங்கிக் கிடக்கிறான். அதனால் மனிதன் தன் மதிப்பையறிய முயற்சிக்கிறானில்லை. கள்ளுண்டவனைப்போல் அடிக்கடி தன் சுயாதீனத்தை இழக்கிறான். கூரிய அறிவை [illegible] ஆக்கும் சக்தியைச் சிதைத்துக் கொள்கிறான். இவ்வாறு தன்னைத்தானே அழித்துக் கொள்கிறான். தனக்குத்தானே நாயகனென்று நினைக்கக் கூசுகிறான். ஐயோ, இவ்வாறு பலவீனத்தால் கீழ் நோக்குகிறான்; பின்னாலேயே போகிறான்; அந்தத்தில் அபஜெயம் அடைகிறான். ஆகா! எண்ணங்களின் சக்தி அபாரமானது. அது அண்ட சராசரங்களை யெல்லாம் அரைக்கணத்தில் தாண்டி அப்பால் செல்லும் ஆற்றலுடையது. நினைப்பதும், செய்வதும் எண்ணத் தொகுதிகளின் வேலைகளே. "நினைப்புகளெல்லாம் வஸ்துக்கள்" என்று கூறுகிறார் ஒரு

தத்துவ சாஸ்திரியார். விரியுமென்று அஞ்சி இந்த விஷயத்தை இப்படியே இறுதியாக்குகிறேன்.

இவ்வுலகத்தைப் போன்ற ஒரு உலகத்தையோ, பல உலகங்களையோ படைக்க வல்லமை வாய்ந்த தவ சிரேஷ்டர்கள் பிறந்து, வளர்ந்து, வசித்து வந்த இப்புனித பூமியில் கைராட்டினமொன்றை நூதனமாய், இலகுவாய், நாகரீகமாய்க் கண்டுபிடித்து நூல் நூற்கப் போட்டி போடுங் காலமும் வந்ததே என்று வருந்தாமலிருக்க முடியவில்லை. நாமென் செய்வோம்? காலச் சக்கரத்திற்குத் தகுந்தபடி, மனிதராய்ப் பிறந்த எவரும் ஆடித்தான் தீரவேண்டியிருக்கிறது. ஒரு மனிதனுடைய ஜீவியக் குறி காண்பதரிதாய்விட்டது. எந்தத் துறையிலும் ஞானம் க்ஷீணிக்கத் தலைப்பட்டுவிட்டது. தாகூர், போஸ், காந்தி முதலான புண்ணியோத்தமர்கள் சிருஷ்டித்த கவிகள், கண்ட நுட்பங்கள், அறிந்து ஏற்படுத்திய கொள்கைகள் வெளியே பரந்து கிடந்த போதிலும் கவனிக்கப்படவில்லை. நாமும் அவர்களைப் போல ஆகவேண்டும் என்ற நினைப்பு உண்டாகுவதும் கஷ்டமாகிவிட்டது. காற்றடிக்கிற பக்கம் மரங்கள் சாய்ந்து கொடுப்பனபோல, தைரியசாலிகள் கை காட்டுகிற பக்கம் ஆடு மாடுகளைப்போல சாய்ந்து கொண்டு வருகிறார்கள் பல வீனர்கள். மறைந்து கிடக்கும் நமது மானத சக்தியைத் தட்டி எழுப்புவோம். நிற்க, குறிப்பிட்ட விஷயத்தை விட்டு விலகி விட்டேன்; இதோ வந்து விட்டேன்.

மனிதன் மயங்கிக் கிடப்பதுபோலவே ஏல விவசாயியும் தன்னை மறந்து கிடக்கிறான். தன்னுடைய தினசரித் தோட்ட வாழ்வில் காணக்கூடிய அரிய, பெரிய, விஷயங்களை அன்றன்றே நழுவ விட்டு விட்டு, பக்கத்திலிருக்கும் வியாதிச் செடியையும், கருகிப்போன சரங்களையும் பார்த்துப் பார்த்துக் கண்ணீர் சொரிகிறான். 10 வருடங்களுக்கு முன்னால் அவனுக்கிருந்த நம்பிக்கை இப்பொழுது குறைந்துவிட்டது. தன்னைக் காட்டிலும்



மேதாவிகளாயிருக்கிறவர்களைக் கண்டு சீர் திருத்தம் செய்து கொள்வோமென்று எண்ணித் தன்னுடைய மூளைக்கும் மனத்திற்கும் வேலை கொடுக்காது காலம் கடத்துகிறான். தன்னிலும் சிறந்தவர் யார்? எங்கிருந்து வரப்போகிறார்? என்று யோசிக்கிறானில்லை. சுருங்கச் சொன்னால், குடியானவன் தன் யோசனா சக்தியை விற்றுவிட்டான். இன்று மண் வெட்டியினால் பூமியைக் கிளறியதினால்தான் செடிகளுக்கு வியாதியுண்டாகி விட்டதென்று யாராவது ஒருவர் சொன்னால், ஆம், ஆம் என்று சொல்லி அப்படியே நம்பிவிடுகிறான். ஆழமான, அகலமான குழிகளினால் செடிகள் கொத்து வியாதிக்கு இரையாகின்றன என்று ஒரு பெரிய மனிதர் சொன்னால், உடனே, அதற்கும் ஆம், ஆம் என்ற தொனி நாலா பக்கங்களிலிருந்தும் உண்டாகிறது. உண்மையை ஆராய்ந்து, தர்க்கித்து, முடிவை நிலைநாட்டுகிறவர்கள் பூச்சியத்திலும், பூச்சியம்.

ஆராய்ச்சிக்குப் போதிய கருவிகள் முன்பு குறைந்திருந்தனவென்ற போதிலும், இப்பொழுது ஆராய்ச்சிக்கு ஏல விவசாய சங்கத்தினால் கதவு திறந்துகிடக்கிறது. துணை வழி வர அறிவும், ஆத்மசக்தியும் நிரம்பியுள்ள சகோதரர்கள் உங்கள் வருகையை எதிர் பார்த்து நின்று கொண்டிருக்கிறார்கள். நீங்கள் ஒன்றும் புதிதாய்ச் செய்யவேண்டாம். நீங்கள் செய்யும் வேலைகளையும், செய்யப் புதிதாய் நினைக்கும் யோசனைகளையும் ஏலவிவசாயியின் பக்கத்திற்கு விடுங்கள். அவைகளை ஒருவர் ஆதரிக்கலாம், இன்னொருவர் மறுக்கலாம். பலரும் சேர்ந்து வாதித்து, ஏல விவசாயிகள் சங்கத்தராசில் வைத்து, நிறுத்து, சிலாக்கியமானதைத் தெரிந்தெடுத்து, நம்முடைய உலகத்திற்குள் பழக்க வழக்கத்திற்கு விடலாம். நவீன முறைகளை அமுலுக்குக் கொண்டுவந்து, சங்கத்தார் ஆதரவைப் பெறலாம்.

பெரியோர்களே, சிநேகிதர்களே, சகோதரர்களே, நீங்கள் உங்களை இகழாதீர்கள். நம்மால் என்னாகுமென்ற பலவீன

பான நிலைப்பை அடியோடு பெயர்த் தெறியுங்கள். உயர்தர நிலைப்புகளில் சஞ்சரியுங்கள். "ஒன் குதிரை மேய்ப்பவனிடத் திலுங்கூடப் படித் தறிந்து கொண்ட அரும பெரும் விஷயங்கள் அநேக முண்டு." என்று ஓர் ஆங்கிலப் புலவர் கூறிய மாணிக்கம் போன்ற மணி வாசகத்தை மனதில் பதிய அமையுங்கள். "முத லில் துன்பம், முடிவில் இன்பம். முதலில் தோல்வி, முடிவில் வெற்றி" என்பது அறிஞர் வாக்கு. நாம் வெற்றி பெறு வோம். நமக்கு வெற்றியுண்டு. கதவைத் தட்டுங்கள், திறக் கப்படும்.

எங்கும் வெற்றி. எதற்கும் வெற்றி.

S. வடிவேல் கௌடர்,
ரூப்பிரண்டு,
பொன் முடி எஸ்டேட்.



# ஐக்கிய இயக்கம்.

முற்காலத்திற்கும் தற்காலத்திற்கும் பல பெரும் வித்தியா சங்கள் காண்கிறோம். கிராமங்களே மிகுந்துள்ள நமது தேசத் தில் நமது முன்னோர்கள் கிராம வாழ்க்கையில் திருப்தியடைந் திருக்க, நாம் கிராமங்களை அலட்சியம் செய்கிறோம்; நகர வாழ்க் கையைப் பெரிதும் விரும்புகின்றோம். நமது தேவைகள் அதிக மாகிக்கொண்டே வருகின்றன. அவைகளைக் கிராமாந்திரங்க ளில் பெறுவதும் அரிதாகவே யிருக்கிறது.

கிராமங்களில் முற்காலத்திலிருந்த சகிப்பும், உதவியும் இப் போது காண்பதற்கில்லை. ஏழை என்று ஆதரிப்பாருமில்லை; கூலி இல்லாது வேலை செய்வாருமில்லை; உழைக்கத் திறமும் முன் போலில்லை; திறமுடையாரும் மனதோடு உழைப்பதில்லை. எங் கும் தன், தன் சௌகரியத்தையே பெரிதாகக் கவனிப்பதாயிருக் கிறது; பிறர் சிரமத்தைச் சிறிதும் கவனிப்பாரில்லை.

விவசாயமே தாங்கிவந்த நமது தேசம், ஜனப்பெருக்காலும், முயற்சிக்கான புது இடம் இன்மையாலும், வேளாண்மையின் மேனிக்குறைவாலும், அனாவசியமான தற்கால நாகரீக ஆடம் பரச் செலவுகளினாலும், வறுமையால் பீடிக்கப்பட்டிருக்கிறது. உழுது பயிர் செய்வோரும் போட்டியன்னியில் சாகுபடிக்கு நிலம் பெறக்கூடியதாயில்லை. நல்ல விலைக்கு விற்றாலும், உழைப்பிற் குப் போதுமான பிரதிபலன் கிடைப்பது அரிதாயிருக்கும் போது, விவசாயக் கடன்கள், நிலத்தீர்வைகள் முதலியவைகளுக்

காக செளகரியமாக விற்க வேண்டியதும் ஏற்படுகிறது. விவசாயம் தவிர்த்து வேறு தொழில்கள் போதுமானவையில்லாததாயும், விவசாயத்தின் வருமானம் ஜீவனத்துக்குப் போதுமானதாக இல்லாததாயும், வேறு தொழில்களிலேயும் போட்டி அதிகமாயும் ஜீவனத்துக்குக் கஷ்டம் அதிகமாயும் இருந்து கொண்டு வருகிறது. வேற்றுமை பாராட்டுவதோடு நில்லாது, தன் தன் செளகரியத்தையும் தன் தன் இலாபத்தையுமே பெரிதாகக் கருதிச்செல்லும் உலகத்தில் மக்கள் படுங் கஷ்டப்பாடு சொல்லவிருக்கக்கூடுமா?

நமது தேசத்தில் மட்டுமல்ல; தற்கால நாகரிகப் போக்கின் கெட்டைக்கவனியாது அநுசரித்துவரும் பல தேசங்களிலும், போட்டியும், வேலையின்மையும் மிகுதியாகிக்கொண்டே வருகின்றன. போட்டியாகிய மனப்பான்மையே ஜனஸமூகத்தின் அபிவிருத்திக்குப் பெருந்தடையாக இருக்கிறது. இரவு பகல் ஓயாது உழைப்பவருக்கும் உண்ண உடுக்கப் போதுமான கூலி கிடைப்பதற்கில்லாமல், முதலாளியே பெரும் இலாபத்தை அடைய விரும்புகிறான். வேலைக்காரனும் இந்த வேலையை விட்டுவிட்டால், அரைவயிற்றுக்கும் இல்லாது கஷ்டப்பட அல்லவா வேண்டும்? என்று தயங்குகிறான். பணமுடையார் சிலர் கையில் நாகரிகச் சிக்கலுக்குள்ளகப்பட்ட தேசங்களெல்லாம் இவ்வாறு தவிக்கின்றன. போட்டி முறை தோன்றி, விருத்தியாகிவருகின்ற காலத்திலேயே அதன் கெட்டைத் தெரிந்த பெரியார் சிலர் அதற்கான மாற்றாக ஐக்கிய இயக்கத்தை வளர்த்திருக்கிறார்கள்.

மனிதன் கல்விச் செல்வத்தால், பொருட் செல்வத்தால் பல வகைப்பட்ட நிலைமையில் இருப்பானாயினும், அவனும், ஜனஸமூகமும் விரும்புவது சுகமான, திருப்தியான வாழ்வே. போட்டி முறையினால் வஞ்சகமான பேச்சுகளும், செய்கைகளும், [illegible]மான நினைவுகளும், அவைகளால் சங்கடங்கள் தோன்



போதா அலைகளினின்றும் தப்பிக்கச்செய்யும் விபரீத வேலைகளும் பகைமையை விருத்திசெய்யவும், நம்பிக்கையை வேரறுக்கவுமே ஆகும். ஐக்கிய முறையோ, தன் தன் செளகரியத்தைத் தேடுவதிலும், பிறர் தன் பொறுப்பில் அடைந்துவரும் நியாயமில்லாத பல செளகரியங்களுக்கு எந்தக் காலத்திலும் இடைஞ்சலாயிருப்பதில்லை. மனிதனுக்கு மனிதன் அருத்தமில்லாத வித்தியாசம் பாராட்டுவதற்கு ஐக்கிய இயக்கம் இடந்தாராதென்றாலும், உண்மை, யோக்கியம், திறமை இவைபற்றி மனிதனுக்கு மனிதன் இருக்கும் வித்தியாசத்தை மதியாதிருப்பதுமில்லை. பொருளுடையாரையும் போற்றும்; கல்வி நலமுடையாரையும் கௌரவிக்கும்; பரஸ்பர அன்பு பரவுவதற்காக எளியார் வலியாரென வித்தியாசம் பாராட்டாது, எல்லோரையும் சுவல் கொள்ளும்; ஆண் பெண் என்ற கழிவுமில்லை; மதபேத, ஜாதிபேத வித்தியாசங்களுமில்லை. ஜனஸமூக முன்னேற்றத்துக்காக உழைக்க விரும்பும் யாரும் அதில் ஈடு படலாம். ஐக்கிய முறை ஒன்றே சமத்துவம், சகோதரத்துவம், சுயாதீனம் இவைகளை வளர்ப்பதற்கான முறையாகும். அதே, சுயமதிப்பையும் பொன்போல் போற்றி வளர்ப்பது. ஒருவர் பிறரைக் குறைவுடையவராகக் கருதி, அதனைத் தன் தாராள சிந்தையால் நிரப்ப வருவாரென்றாலும் அந்த மனப்பான்மைக்கு இடந்தாராது. அந்த உதவியை வெறுத்துத்தள்ளும். சமத்துவமில்லாத மக்களிடை சுயமதிப்புவளர இடமிராதல்லவா?

ஐக்கிய இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகளை அனுஷ்டானத்தில் பூரணமாய்க் கொண்டிருக்கும் தேசங்களே உலகில் சிறந்த தேசங்களாக விளங்குகின்றன. டென்மார்க்கு தேசத்தில் சீமைபோல் கோடீஸ்வரப் பிரபுக்கள் காண்பது அரிதென்றாலும், ஏழைகள் அந்த தேசத்தில் காணவே முடியாதென்ற பாக்கியம் ஐக்கிய இயக்கத்தாலானது என்பதைத் தெரிந்த யார்தான் ஐக்கிய இயக்கத்தில் ஈடுபடாதிருக்கக்கூடும்?

திருப்தியாகக் காலம் கழிப்பதே வாழ்க்கையின் மேன்மையான நோக்கமானால், டென்மார்க்கு தேசத்தைக்காட்டிலும் திருப்தியான வாழ்க்கை வேறு எந்தத் தேசத்தில் காண்கிறோம்? எவர்க்கும் போதுமான நிலங்களும், அவைகளின் மத்தியில் வசிக்கச் சௌகரியமான கட்டிடங்களும், விவசாயமோ வேறு வேலையோ சரீரத்துக்கு மிதமிஞ்சிய சிரமமில்லாமல் செய்துகொண்டிருக்க சௌகரியங்களும் அமைந்திருக்கிறதென்றால், அப்படிச் சௌகரியமில்லாதாரும் ஐக்கிய இயக்கத்தின் உதவியால் எளிதிலமைத்துக் கொள்ளலாமென்றால், ஐக்கிய தெய்வமன்றி வேறோர் தெய்வத்தையும் மனிதன் கண்ணெடுத்துப் பார்ப்பானோ? வசிக்கும் வீட்டிலுள்ள கிணறு, வீட்டுக்கும், மாட்டுக்கும், ஸ்நானத்துக்கும், காய்கறித்தோட்டத்துக்கும், விவசாயத்துக்கும், மாட்டின் தீனிப்பயிருக்கும் வேண்டிய அளவு பிரயோஜனப் படுகிறதென்றால், வீட்டினின்றும் வெகுதூரம் போகாமலேயே ஆணும் பெண்ணும் விவசாயத்தைக் கவனிக்கவோ கோழி, ஆடு, மாடு, பன்றி இவைகளை வளர்க்கவோ சௌகரியமாக இருக்குமானால், வேறு வாழ்க்கையும் விரும்புவாருண்டோ? இவ்வித சௌகரியமான வாழ்க்கை மட்டுமல்ல, விவசாய விளை பொருள்களுக்கும் கோழி முட்டைக்கும், பசுவின பாலுக்கும், கோழி, ஆடு, பன்றி, மாடு இவைகளின் இறைச்சிக்கும், கோழி தவிர்த்த மற்றவைகளின் தோலுக்கும் தனக்குச் சிரமமில்லாமலே நல்ல விலை தனக்கு வாங்கித்தரவும், ஐக்கிய இயக்கம் அந்த தேசத்தில் உதவுகிறதென்றால், எதற்காக மனிதன் கவலைப்படப் போகிறான்? உலகத்தில நடக்கின்ற அக்கிரமங்கள், வயிற்றுக்கொடுமை, மானக்கேடு காரணமாகவே வெகுவாக நடக்கின்றமையாலும், மானக்கேட்டின் பெரும் பாகத்துக்கும் வயிற்றுக்கொடுமையே காரணமாகின்றதாலும், வயிற்றுப்பாட்டுக்குச் சிரமமில்லாத செல்வர்களாக விளங்குகின்ற அந்நாட்டில் போலீசே குறைவாயும் அதற்கும் வேலையில்லாதிருப்பதாக நாம் கேட்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுவுமிருக்கிறதோ? தரைப்படை, கடற்படை, பிரங்-



கிப்படை, ஆகாயப்படை இவைகளைப் பலதேசங்களும் பெருக்கிக்கொண்டு வருகின்றநாளில், இருந்த படைகளையும் ஐக்கிய இயக்கத்தின் பயனாக தேசத்தில் ததும்பி நிற்கும் மனத்திருப்தியையும், ஒற்றுமையையும், ஊக்கத்தையும் கண்டு நம்பிக்கைகொண்டு அந்த தேசம் கலைத்துவிட்டதென்றால், அப்பேர்ப்பட்ட நிலைமையை நம் தேசமும் பெறலாகாதா என்று விரும்பாத வன்னெஞ்சர் எவரும் எங்கேனும் காணக்கூடுமோ? நமது தேசத்திலும் ஐக்கிய இயக்கம் ஆரம்பித்து இருபது வருஷங்களுக்கு மேலாகியும் ஐக்கிய இயக்கத்தின் அடிப்படையான கொள்கைகள்கூடத் தெரிந்தவர்கள் பலரைக்காண்பது அரிதாயிருக்கிறதென்றால், ஐக்கிய இயக்கம் இதுவரை நம் தேசத்தில் அவ்வளவு பிரயோஜனமான வேலை செய்யாதது வியப்பிற்கிடமில்லையே?

(இன்னும் வரும்.)

இரா. கு. நல்லகுற்றாலம் பிள்ளை, B.A., B.L.,
வக்கீல், முன்சிபல் சேர்மென்,
ஐக்கிய சங்க கௌரவ உதவி ரிஜிஸ்டிரார்,
ஸ்ரீ வில்லிபுத்தூர்.

# கூட்டுறவு இயக்கம்.

**கனம் ராமதாஸின் வாக்குகள்.**

தற்காலக் கூட்டுறவு இயக்கத் தாத்பரியம் மேனாட்டைச் சேர்ந்தது. பண்டைக் காலத்தில் நம் தேசத்தில் கூட்டுறவு இயக்கம் இருந்து வந்தது. அந்தப் பண்டைக்கால இயக்க முறைகள் இப்போது ஏற்பட்டால், நம் தேசம் நிச்சயமாய்ச் செழிக்கும். பழைய காலத்திய திருப்தியான கிராம சமூகச் சங்கங்களும், கிராம சமூக வாழ்க்கைகளும் இப்போது அடியோடு ஒழிந்து போய்விட்டது. ஒவ்வொரு ஜாதியிலும் நில முள்ளவர்களும், நிலமில்லாதவர்களு மிருக்கிறார்கள். ஏழைகளும், பணக்காரர்களும் ஒவ்வொரு ஜாதியிலும், ஊரிலு முண்டு. ஒவ்வொரு வீட்டுக்கும், ஒவ்வொரு கிராமத்துக்கும் பண்டைக்காலத்தில் தேவையான பண்ணையாட்களும், விவசாயிகளும், ஆசாரிகளும், பரிகாரிகளும், சகலதொழிலாளிகளு மிருந்தனர். அவர்களுடைய வேலைகளுக்காக அவரவர்களுக்கு அறுவடைக் காலங்களில் நெல் முதலிய நவதானியங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. எல்லா ஜனங்களும் செழிப்புடனும், திருப்திகரமாயும் வாழ்ந்து வந்தனர். கிராம வாழ்க்கை முன் காலத்தில் அவ்வளவு செழிப்புடனிருந்தது, ஆனால் தற்காலத்தில் அதெல்லாம் போய்விட்டது. முற்காலத்திய கிராமக் கட்டுப்பாடுகளும், ஒற்றுமையும் இப்போது அடியோடு ஒழிந்து விட்டன. நாம் மீண்டும் அவைகளைக் கொண்டு வரவேண்டும். மேனாட்டு முறைகளில் ஆரம்பிக்



கப்பட்டிருக்கும் கூட்டுறவு இயக்கத்தை நாம் முற்றிலும் தள்ளிவிடமுடியாது. மேனாட்டில் ஏழைகளைப் பணக்காரர் கொள்ளையடிக்கிறார்கள், என்ற எண்ணத்தின் மீது இந்த இயக்கம் ஆரம்பிக்கப் பட்டதாகத் தெரிகிறது. ஏழைகள் வேலைசெய்து கஷ்டப்பட்டும் ஆனால் அதில்வரும் பிரயோஜனத்தை எல்லாம் பணக்காரர்களே அனுபவிக்கிறார்கள் என்ற நோக்கத்தால் இந்த இயக்கம் சீமையில் ஏற்பட்டதா யிருக்கிறது. விவசாயிகளும், குடியானவர்களும் விலை பொருள்களை உற்பத்தி செய்வதிலும், விற்பதிலும் மேற்படி இலாபத்தை அனுபவிப்பதில் போதிய உரிமையடைய வேண்டுமென்றே இந்த இயக்கம் மேனாட்டில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பொருளாதார நிலைமையினால் கஷ்டமேற்பட்டிருக்கும் ஜனங்களுடைய இயக்கம் இது. சமத்துவம் என்ற கொள்கையை இந்த இயக்கம் பரப்புகிறது. சிறந்த ஒற்றுமையை இந்த இயக்கம் தானாகவே ஏற்படும்படி செய்கிறது. இந்த இயக்கத்தில் சேர்ந்திருக்கிறவர்கள் சகலரும் முன்னேற்றமடைய வழியுண்டு. இதில் எவரும் சேரலாம். இந்த இயக்கத்தில் சேர்ந்தவர் ஒவ்வொருவரும் வேலை செய்யும்படி தூண்டப்படுகிறார். ஆகவே இந்த இயக்கத்தின் பலனாக தேசம் முன்னேற்றம் அடையலாம். ஜில்லா மத்திய பாகங்களில் லட்சக்கணக்கான பணம் செலவின்றி யிருக்கிறது.

ஜில்லாவின் பலபாகங்களிலும் ஜனங்கள் பணமில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே ஜில்லா முழுதும் பணம் புரளும்படி சூப்பர்வைசிங் யூனியன்கள் செய்யவேண்டும். விவசாயிகளுக்கு அதிக காலக்கடன்கள் அளிக்கப்படவேண்டும். ஏழை ஜனங்களுக்குள் அதிகப் பணம் உண்டாகும் பொருட்டு இந்த இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. விளைபொருள்கள், விவசாயம் அதிகரிக்கவேண்டும். அநாவசியச் செலவு சுருங்கவேண்டும். தற்கால, நவீன, சீர்திருத்தப்பட்ட முறைகளில் விவசாயம் நடக்கவேண்டும். விவசாய இலாகாவும், கூட்டுறவு இலாகாவும் ஒத்து

மைக்கவேண்டும்; விவசாயிகள் குடிசைத் தொழில்களையும் செய்துவர ஏற்பாடு செய்யப்படவேண்டும். நூல் நூற்றல், நெசவு முதலிய கைத்தொழில்கள் வீட்டுக்கு வீடு ஏற்படவேண்டும். கூட்டுறவு முறையில் விளைபொருள்களை ஜனங்கள் லாபகரமாய் வாங்கவும், விற்கவும் கற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

ஏழைகளே பணத்தை வசூலிக்கிறார்கள்; தம் பணத்தையும் சேர்த்து வைக்கிறார்கள்; தாங்களே தங்களுக்கு தங்கள் பணத்தைக் கடன் கொடுக்கிறார்கள்; தங்கள் கைத்தொழில்களையும் ஜீவனோபாயத்தையும் பார்த்துக்கொள்கிறார்கள்; இலாபத்தை நல்வழியில் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள்; ஏழ்மைத்தனத்தைப் போக்கிக்கொள்ளுகிறார்கள்; தங்கள் ஊரை க்ஷேமமடையச் செய்கிறார்கள். தேசம் செழித்தோங்குகிறது. இவைகள்தான் இந்த இயக்கத்தின் பலன்.

(மொழி பெயர்ப்பு.)


# ஏலவிவசாயி.

திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கத்திலிருந்து வெளிவரும் ஓர் மாதப் பத்திரிகை.


ஒன்று பட்டாலுண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கி லனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கேது வேண்டும்?

(பாரதியார்)


ரா. நாராயணஸ்வாமி, ஆசிரியர்.

| | | |
|---|---|---|
| மலர் 1 | உத்தமபாளையம். பிரபவ ஞு ஆனி மீ<br>1927ஞு ஜுன்-ஜுலை மீ | இதழ் 3 |


## திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம்.

திருவாங்கூர் சமஸ்தானக் காடுகளில் தற்செயலாய் முளைத்திருந்த ஏலச்செடிகளை பெரியகுளம் தாலூகா வாசிகள் 1012ம் ஆண்டுக்கு முன்னால் கண்டுபிடித்து, தொடுபுழை தாசில்தாரிடம் காண்பிக்க அதன்மேல் அவர் திருவாங்கூர் திவானிடம் சொல்லி, இவ்வேளாண்மையை சமஸ்தானக் காடுகளில் விருத்தி செய்யும்படி ஏற்பாடு செய்தால், சும்மா கிடக்கும் காடுகளின்மூலம் கவர்ன்மெண்டுக்குத் தகுந்த ஒரு வருமானம் கிடைக்குமென்று சொல்ல, அந்தக் காலத்தில் திவானாயிருந்த கனம் ராஜா கேசவ

தாஸ் யோசனை செய்து அக்காடுகளுக்குச் சமீபவாசிகளும், ஏலச்செடிகளைக் காண்பித்தவர்களுமான கூடலூர் முதல் கம்பம், கோம்பை, பண்ணைப்புரம், தேவாரம் போடிவரையுள்ள கிராமத்தார்களைத்தூண்டி ஏலத்தோட்டங்களை உண்டாக்கும்படி ஏற்பாடு செய்தார். பிறகு ஷை கிராமத்தார்கள் தங்கள் தங்களுக்குச் சமீபத்திலுள்ள காடுகளை வெட்டி, திருவாங்கூர் கவர்ண்மெண்டின் அதிகாரத்தின் கீழ் ஏலத்தோட்டங்களை உண்டு பண்ணினர்கள்.

இவர்களால் சேகரிக்கப்படும் மகசூல்களை தோட்டக்காரர்களின் இஷ்டம்போல் விற்க விடாமல், கவர்ண்மெண்டிலேயே கிறுவை செய்து வைத்துக்கொண்டு, பம்பாய் முதலிய விடங்களிலுள்ள வியாபாரிகளுக்குத் தகவல் கொடுத்து, ஆலப்பிழைத்துறை முகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்து வந்தார்கள். அக்காலங்களில் துலாம் 1க்கு ரூ 40, 50 விதம் விற்பனையாகி வந்தது. சில சமயங்களில் 60, 70 வரையும் விற்றதாகவும் தெரியவருகிறது. அதில் விற்பனைக்கான செலவுகளை நீக்கி மீதப்பட்டதில் கவர்ண்மெண்டு 5ல் மூன்று பங்கு வாரம் தனக்கு எடுத்துக்கொண்டு குடிகளுக்கு இரண்டு பங்குகள் கொடுப்பது வழக்கம். ஏலத்தோட்டக்காரர்கள் தொடுபுழை, பீர்மேடு முதலியவிடங்களுக்குச் சென்று ஷை தொகையை வாங்கிப் பொதிமாடுகளில் பாரமேற்றி, வீட்டுக்குக் கொண்டுவந்து சேர்ப்பார்கள். அப்பொழுதெல்லாம் ஏல விவசாயிகள் நல்ல நிலைமையிலிருந்ததாகவே தெரிகிறது. அதன்மேல் கவர்ண்மெண்டுக்கு 3 பங்கு வாரத்தின்மேல் வருஷவாரி கிடைத்து வந்த தொகையை அப்போதுள்ள ஏக்கர் விதமாக வசூலித்துவிட எண்ணி, 1069ம் ஆண்டில் ஆனரபிள் திவான் சங்கரசுப்பய்யரவர்கள் ஏலவிவசாயிகளின் அநுபவத்திலுள்ள தோட்டங்களைச் சர்வே செய்து, ஏக்கர் ஒன்றுக்கு ரூ 6....4...0 விதம் தீர்வை ஏற்படுத்தி, விவசாயிகள் தீர்வையைச் செலுத்திவிட்டு மகசூல்களைத் தங்கள் ஊர்களுக்குக் கொண்டுபோய் இஷ்டம்போல் விற்றுக்கொள்ளும்



படி உத்திரவிட்டார்கள். இந்த முறை ஏற்பட்ட பிறகு ஏலவிவசாயிகள் கட்டுப்பாடாயிருந்து விற்கத் தெரியாமல், விலையைக் குறைத்து விற்று வந்தார்கள். விலைக் குறைவாலும், தீர்வை உயர்வாலும் விவசாயிகளுடைய வரும்படி குறைந்து அவர்கள் கஷ்டப்பட்டதோடு ஏலத்தோட்டங்களைக் காடேறவும் விட்டுவிட்டு, கிஸ்தி செலுத்த முடியாமலும் கஷ்டப்பட்டு வந்திருக்கிறார்கள்.

மேற்கண்டமுறையால் ஏலக்குடிகள் கஷ்ட நஷ்டப்படுவதைக் கண்டு கனம் திவான் V. P. மாதவராவ் அவர்கள் 1080ம் ஆண்டில் ஏலத்தோட்டங்களை மறுபடியும் சர்வே செய்து, ரூ 6...4....0 தீர்வையை ரூ 2 ஆக்கி, ஏக்கர் 1-க்கு ரூ 10 வீதம் தரைவிலை ஏற்படுத்திக் குடிகளுக்குப் பட்டாப் போட்டுக் கொடுத்தார்கள். இந்த மாறுதலால் ஜனங்களுக்கு ஒருவித சௌகர்யம் ஏற்பட்டபோதிலும், தீர்வை விகிதம் குறைவாயிருப்பதைக் கண்டு, அநேக ஏலவிவசாயிகள் பிரிட்டிஷிலுள்ள தங்கள் பூமிகளை விற்று ஏராளமான ஏலத்தோட்டங்களை உண்டுபண்ணி விட்டார்கள். அதனால் மகசூலும் கூடுதலாகப் பெருக ஆரம்பித்தது. அதைக் கட்டுத் திட்டமாக விற்பனை செய்யாமல் அவரவர்கள் இஷ்டம்போல் விற்றுக் கொண்டிருந்ததால், விலை குறைந்து தாங்கள் போட்ட முதலுக்கு வட்டிகூடக் கிடைக்காமல் ரூ 6....4....0 தீர்வை ஏற்பட்டிருந்த காலத்திலேற்பட்ட கஷ்டங்களைக் காட்டிலும் கூடுதலான கஷ்டங்களை அடையும்படியாய் விட்டது. அநேகர் ஏலத்தோட்டங்களை ஒரு அணா ஏலத்தில் விட்டுவிட்டதோடு பிரிட்டிஷிலுள்ள பூமிகளையும் இழந்து விட்டார்கள். அதன்மேல் சிலருடைய முயற்சியால் பெரியகுளத்தில் "ரத்ன விலாசக் கம்பெனி" என்று ஒரு விற்பனை ஸ்தாபனத்தை ஆரம்பித்து, எல்லா ஏலவிவசாயிகளும் தங்கள் சரக்குகளை கம்பெனி மூலமே விற்றுவர வேண்டுமென்று ஒருவித கட்டான திட்டத்தை ஏற்படுத்தி, நடத்த ஆரம்பித்தார்கள். ஆனால் அது அதிலுடைய சில அசந்தர்ப்பமான முறைகளாலும், வெகுகால

மாக ஏலவிவசாயிகளிடமிருந்து தங்கள் இஷ்டம்போல் தட்டி எடுத்து, தூரதேசங்களுக்குக் கொண்டுபோய் ஏராளமான இலாபத்திற்கு விற்றுக் கனவந்தர்களான சில வியாபாரிகளின் எதிர்ப்பாலும், ஏல விவசாயிகளில் பேராசை கொண்ட சில சுயநலமிகளுடைய நடத்தைப் பிசகாலும், கட்டுக் குறைவாலும் அதை ஆரம்பத்திலேயே இருந்தவிடம் தெரியாமல் ஒழித்து விட்டார்கள். இதிலிருந்துண்டான அதிர்ச்சியால் அநேகர் "அகப்பட்டவனுக்கு அட்டமத்தில் சனி" என்பதுபோல் தெண்டங்களுக்கு ஆளானதுதான் அதனால் ஏற்பட்ட பலனாய் முடிந்தது.

இதன்மேல் விவசாயிகளுக்கு விற்பனை முறையில் சரியான வழி திறப்பதற்கில்லாமல் கேழ்வரகு, சோளம்போல் துலாம் ஒன்றுக்கு 9, 10க்கு விலை இறங்கிவிட்டது. விற்பனை செய்யும் முறையோ மிகவு கேவலமாயிருந்தது. அப்போதுள்ள வியாபாரிகளெல்லாம் விருதுபட்டி ஆசாமிகளே. இப்போதுள்ள சேட்டுகள் அந்தக் காலங்களில் கிடையாது. சரக்கு வாங்குவதெல்லாம் அநேகமாய் அவர்களாய்த் தானிருந்தார்கள். இவர்கள் ஏலச்சரக்கு வியாபாரத்தில் விடும் பெரும் அடைந்ததைக் கண்ட இங்குள்ள சில விவசாயிகள் இவ்வியாபாரத்தை ஆரம்பிக்க வியாபாரப் போட்டியால் அவர்கள் இவர்களை ஆள் பேர் கூடத்தெரியாமல் ஆக்கிவிட்டார்கள். சேட்டுகளையும் இங்கு வரவிடுவதில்லை. அவர்களே ஏகபோகமாக அனுபவித்து வந்தார்கள். இவர்கள், ஏல மகசூல் எடுப்பு ஆரம்பிக்கும் ஆவணி மாதத்தில் தேவாரம், போடி, கம்பம் முதலிய இடங்களில் கடைகளை வைத்துப் பங்குனி மாதத்திற்குள் முடித்துவிட்டு அவர்களுடைய பங்குனிப் பொங்கலுக்காக ஊருக்குப் புறப்பட்டு விடுவார்கள். "அஷ்ட தரித்திரம் பிடித்த ஊரில் அரைப்பணத்துக்காரன் முதலாளி" என்பதுபோல் ஏல விவசாயிகளிடத்தில் கூடுதலான செல்வாக்கையும் அடைந்திருந்தார்கள். ஏலச்சரக்குகளை விற்பதற்கு இவர்களைத் தவிர வேறு வழி தெரியாமலிருந்ததால் விவசாயிகள் தங்கள் மகசூல்களை இவர்களிடமே ஒப்பிக்க வேண்டியதாய் விட்டது. இந்த வியாபாரிகளுக்குத் தகுந்த



"எசப்பர்கள்" இங்கு ஏற்பட்டிருந்தார்கள். இவ்விரு கோஷ்டியாரே நமது ஏலச்சரக்குகளை அழிப்பவர்கள். இந்த ஆசாமிகளிடம் நாம் பட்ட கஷ்டத்தை நமது விவசாயிகள் இப்போது மறந்து விட்டதாகவே தெரிகிறது.

ஏலத்தோட்டங்கள் பெருவாரியாயுள்ள போடி, தேவாரம், பண்ணைப்புரம், கோம்பை, கம்பம், முதலிய ஊர்களிலெல்லாம் வியாபாரிகளுக்கும், விவசாயிகளுக்கும் மத்தியில் விலையை முடிவு செய்வதற்காக தரகர்களென்றும், எசப்பர்களென்றும் மாடு மாற்றிகளைப்போல சிலர் இருந்தார்கள். விலையிலும், நிறுவையிலும் வியாபாரியின் மனம்போல் முடித்துக் கொடுத்தால் துலாம் ஒன்றுக்கு சில அணாக்கள் பிரதிப் பிரயோஜனமாகக் கிடைக்கும். இந்தச்சில அணாக்களுக்காக இவர்கள் செய்யும் வேலையோ அபாரமாயிருக்கும். இந்த எசப்பர்களே நமது பழைய சேல் ஏஜண்டுகள். வியாபாரிகளும் இவர்களன்னியில் தனியே விலை பேசமாட்டார்கள். யாராவது சரக்கை விலைக்குத் தருவதாகச் சொன்னாலும் எசப்பனில்லாமல் கேட்கமாட்டார்கள். இந்த விசுவாசத்தை எசப்பர்களும் மறக்காமல் நன்றியுடன் நடந்து கொள்ளுவார்கள். இதனால் எசப்பர்களுக்கு வருஷத்தில் 10 மாதம்வரை நல்ல வரும்படி வரக்கூடியதாயிருந்தது. வியாபாரத்திற்காக வரும் வியாபாரிகள் அநேகமாய்க் காலை நேரங்களில் தான் வருவது வழக்கமாதலால், இவர்களை எதிர்பார்த்தவண்ணம் எசப்பர்களும் வீதிகளில் காத்திருப்பார்கள். அவர்களிடம் ஏலவிவசாயிகள் தங்களுடைய அவசரத்தைச் சொல்லி "இன்னைக்கி நம்மசரக்கை எப்படியாவது வித்துக் கொடுக்கவேணும், விலைமட்டும் கொஞ்சம் சரியாயிருக்கவேணும்." என்று தங்கள் குறைகளை முறை செய்து கொள்வார்கள். எசப்பர்களும் இவர்கள் விஷயத்தில் ஏதோ அக்கறையுள்ளவர்களைப்போலப் பாசாங்கு செய்து "நம் விஷயத்தில் அப்படியெல்லாம் நினைக்க வேண்டாம்; நானு தானத்தாழ்வாய் விலைபேசி விடுவேன்; வேணு மானால், இன்னைக்கிப்பாருங்கள்" என்று எல்லாருக்கும் நல்ல பிள்ளை போலப் பேசி விடுவார்கள். வியாபாரி சரக்கைத் தோளில்

போட்டமட்டில் வருவான். நமது மாடுமாற்றிகள், வியாபாரியைக் கண்டதும் "வா, அண்ணே எங்கே தப்பினைப்போல புறப்பட்டு விட்டே" என்று கேட்பார்கள். 'இல்லய்யா, எருமை மாடு வேணும் பால் மோருக்கு ரொம்ப திண்டாட்டமாயிருக்கு; ஒரு பால்மாடு பாக்கலாமென்னு வந்தேன்." என்பான், அல்லது "சாக்கு விலை ரொம்பவும் இறங்கிப்போச்சி; கொஞ்சம் பருத்தி பாக்கலாமென்னு வந்தேன்" என்று ஏதாவது சரக்கைத்தவிர வேறொன்றைச் சொல்வான். அதற்குள் அங்கங்குள்ள எசப்பர்களும் வந்து சேர்ந்துவிடுவார்கள். அந்த மட்டில் "பேச்சை வளர்த்து" வா அண்ணே, கொஞ்சம் நல்லசரக்கு இருக்கு, பாப்போம்' என்று ஒரு எசப்பன் வியாபாரியின் கையைப்பிடித்து, இழுப்பான். "வாண்டாமப்பா, முந்தி வாங்கினதே ஆளைப்பிடிக்கும் போலிருக்கு; இன்னும் வாங்கி என்ன செய்யிரது" என்று வியாபாரி சொல்வான். "வா, உன்மனம்போல் சௌக்கியமாய் வாங்கித் தருகிறேன்." என்று எசப்பர்கள் இழுவையில் ஆரம்பிப்பார்கள். அதன்மேல் ஏதோ சமாதானமில்லாதவர்களைப்போல நடித்து வியாபாரி புறப்படுவான். அங்கு வந்துள்ள மற்ற எசப்பர்களும் ஆடு, மாடுகள்போல் ஒரு வியாபாரியின் பின்னால் 9 எசப்பர்கள் பின் தொடர்ந்து போவார்கள். இத்தனைபேருக்கும் உட்காரக்கூட இடம் இருக்காது குடியானவன் வீட்டுத் திண்ணையில். இத்தனை பேருமாகக்கூடி, ஒரு விவசாயியின் வீட்டுக்குப் போனவுடன், சரக்கைக்கொட்டிக் காட்டுவதற்குக்கூட இடமில்லாமல் உட்கார்ந்து கொள்வார்கள். வீட்டுக்காரன் வந்த மனிதர்களுக்குத் தாம்பூலங்களை வைத்துவிட்டு, சரக்கை எடுத்துக்கொட்டிக் காட்டுவான். பிறகு அந்த இடத்தில் நடக்கும் அநியாயம் ஒரு விதத்திலிருக்காது. வியாபாரி சரக்கை அள்ளிப்பார்ப்பான். எவ்வளவு நல்ல சரக்காயிருந்தாலும், ஏதாவது கோளாறு சொல்லி "இது நமக்குப் பிடிக்காது" என்று சொல்லாமலிருக்கமாட்டான். எசப்பர்கள் வியாபாரிக்கு என்ன விலைக்குப் பிடிக்குமென்பதை அறிவதற்காக முதலில் வேஷ்டிக்குள் கைகளைக் கோர்த்து, இறை பாஷையில் கேட்பார்கள். இது சரக்கு விற்பனைச் சடங்கில் நடக்கும் ஆரம்ப சாஸ்திரம்.



அதற்குமேல் ஒரு எசப்பன் விவசாயியின் காதைக்கடிப்பான். விலை ரொம்பவும் தாழ்வாயிருப்பதை அறிந்து, விவசாயி முணுமுணுப்பான். எந்த எசப்பன் விலை முடித்து சாம்பிள் அள்ளிப்போடுகிறானோ அவனுக்குத்தான் கமிஷன் கொடுப்பது வழக்கம். ஆகையால் அங்குள்ள எசப்பர்கள் ஒருவர் மாற்றி ஒருவர் குடியானவனைச் சரிப்படுத்துவதும், வியாபாரியைச் சமாதானம் செய்வதும் சரிப்படாமலிருக்கும்போதே சாம்பிளை அள்ளிப்போடுவதற்காக வியாபாரியின் வேஷ்டியைப் பிடித்திழுப்பதும், விலை கூடுதலென்று வியாபாரி வேஷ்டியை இழுத்துக்கொள்வதும், குடியானவன் காதைக்கடிப்பதுமான சூர்ப்பநகைப் பங்கம், திரௌபதை துகிலுரியும் பாகம் முதலியவைகளை நாடகமாக நடத்தி, அரைக்கால் ரூபாய் டிஸ்கவுண்டுக்காக ரூ 5 ஐ இறக்கி, "கடுவனும் பொதுவனும் இல்லாத ஊர்பாழ்" என்று ஒரு சுலோகத்தையும் சொல்லிக்கொண்டே சாம்பிளை அள்ளி வியாபாரியின் வேஷ்டியில் ஒரு எசப்பன் போட்டுவிடுவான் விவசாயி எசப்பன் சொல்லிப்போகும் விலையைக்கேட்டு "வேண்டாம்" என்று சொல்வதற்கு முன், வியாபாரி ஏதோ கூடுதல் விலைக்கு அள்ளிப்போட்டு விட்டதாகப் பாவனைகள் செய்து "ஆகா, வேண்டாம், வேண்டாம்" என்று சத்தம் போட்டுவிடுவான். அதன்மேல் எசப்பர்களுடைய சமாதானமும், வியாபாரியின் பாவனையும், தன் அவசர நிலைமையும் குடியானவனை மீறிப் பேசவிடாது. கடைசியில் வியாபாரி தனக்கு வேண்டிய மனுஷாள் சரக்காயிருக்கப்போய் இந்த விலைக்குச் சம்மதித்ததாயும், நாளை நஷ்டம் வந்தாலும் வாங்கிக் கொள்ளலாமென்று வாங்கியிருப்பதாயும், தான் இன்ன விலைக்குச் சரக்கு வாங்கியிருப்பதாக வெளியில் யாரிடமும் சொல்லக்கூடாதென்றும் கண்டிஷன் செய்துகொண்டு சாம்பிளை முடிபோடுவான். இத்திருவிளையாடல் இதோடு நிற்காது. இதற்குமேல் நிறுவைக்கு ஆரம்பிப்பார்கள். அரைக்கால் ரூபாய்க்காக ரூ 5, 6 குறைத்து வாங்கிக் கொடுத்தாலும், கமிஷன் கிடைக்காது. நிறுவையிலும் ஒன்றுக்கு ஒன்றேகாலாக இருக்கவேண்டும். இதற்காகக் கொண்டுவரும்

துலாக்கோலோ அம்மியையும் குழவியையும் சமனாக நிறுத்துக்காட்டக்கூடிய யோக்கியதையிலிருக்கும். படிக்கல்லோ சொல்லவேண்டியதில்லை. இதற்குமேல் கைவெட்டு, கால்வெட்டுகள் வேறே இவைகளில் எதிலாவதொரு வழியில் ஆசாமிக்குத்தக்கபடி மோசம் நடக்கும். இப்படியெல்லாம் நிறுத்துக்கொடுத்தாலும் விவசாயிக்குக் கைமேல் காசு கிடையாது. மாதக்கணக்கில் அலையவேண்டும். சில சமயங்களில் ஆசாமியையே காணமுடியாமல் போனாலும் போகும்.

இந்த மாதிரியான முறையில் நமது ஏல விவசாயிகள் தங்கள் சாக்குகளை விற்று வந்ததால் விலை குறைந்து, எல்லா ஏல விவசாயிகளும் கடன் பட்டு, வாரண்டுகளுக்கும், இன்சால்வெண்டுக்கும் ஆளாகி, பட்ட கடன்காரருக்கு வழிசெய்ய முடியாமலும், நல்ல விலைக்கு விற்க வழிதெரியாமலும், குரங்காட்டியின் கையிலகப்பட்ட குரங்குபோல், விருதுபட்டிச் சில ஏலக்காய் வியாபாரிகளின் தயவை எதிர்பார்த்து ஆடிக்கொண்டிருந்தார்கள். இதுவே நமது ஏல விவசாயிகள் சங்கம் ஏற்படுவதற்கு முந்தின ஏல விவசாயிகளின் சரித்திரச் சுருக்கம்.

(தொடரும்.)

பண்ணைப்புரம் T. B. கிருஷ்ணஸ்வாமி,
காரியதரிசி,
திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம், கோம்பை.

---

குறிப்பு:— இவ்வியாசதார் குறிப்பிட்டது அக்காலத்தில் ஏல வியாபாரம் செய்த சில வியாபாரிகளைப் பற்றியே. ஆகையால் விருதுநகர் வர்த்தகர்கள் இதைப்பற்றிக் கவனிக்காதிருப்பார்களாக. விருதுநகர் தென்னிந்தியாவில் முக்கியமான வியாபார ஸ்தலங்களில் ஒன்று. விருதுநகரில் குபேரன் போன்ற வியாபாரிகளும் செல்வச் சீமான்களும் இருக்கிறார்கள் என்பது எல்லா ஏல விவசாயிகளுக்கும் நன்கு தெரியும்.

ஆசிரியர்.



# விவசாயப் பழமொழிகள்.

1. வேதநான் முகலாகி விளங்குகின்ற கலைபலைத்தும்
ஓதுவா ரெல்லாரு முழுவார்தந் தலைக்கடைக்கே
கோதைவேன் மன்னவர்தங் குடைவளமுங் கொழுவளமே
ஆதலால் இவர்பெருமை யார் உரைக்க வல்லாரே ?

2. சுழன்றுமேர் பின்ன துலக மதனால்
உழந்தும் உழவே தலை.

3. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

4. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின் செல்பவர்.

5. பலகுடை நீழலுந் தங்குடைக் கீழ்க்காண்பர்
அலகுடை நீழ லவர்.

6. இரவா ரிரப்பார்க் கொன்றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

7. உழவினார் கைம்மடங் கினில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.

8. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.

9. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபின்
நீரினு நன்றதன் காப்பு.

10. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்து
இல்லாளி னூடி விடும்.

11. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணில்
நிலமென்னு நல்லா ணகும்.

12. எண்ணிப்பார் குடித்தனத்தை எண்ணாதேபார் வே
ளாண்மையை.

13. ஆற்றங் கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.

14. அழிவே மழையினு முழுதேவழு

15. செழிச்செல்வம் சோரம்படாது.

16. ஓதுவான் எல்லாம் உழுவான் தலைக்கடையில்.

17. தொழுதூண் சுவையினு முழுதூணினிது.

18. பயிரையிட்டுப் பாலத்தைத்தோலே.

19. ஏரையிகழ்ந்தார் பேரையிழந்தார்.

20. சீரைத்தேடின் ஏரைத்தேடு.

21. ஏர்நடந்தால் பேர்நடக்கும்.

22. மண்ணைநம்பினாலும், மன்னனை நம்பினாலும் வீண்போகாது.

23. அழியாச்செல்வம் விளைவே யாகும்.

24. குடிஏற நெல்லேறும்.

25. குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்.

26. குடி உயர முடி உயரும்.

27. செங்கோலைக் காக்கும்கோல் ஏரடிக்கும் சிறு கோலே.

28. குடித்தனமே துரைத்தனம்.

29. குடியானவனோ, முடியானவனோ?

30. உழவின்மிகுந்த ஊதியமில்லை.

31. வியவசாயமோ ரஸவாதமோ.

32. உழுதவன் கெட்டதில்லை.

33. அழுதுகொண்டிருந்தாலும் உழுதுகொண்டிரு.

34. பருத்திச்செடியும் பாலுமுள்ளவனுக்குப் பஞ்சமில்லை.

35. இராஜனுக்கு செங்கோல், ஸம்சாரிக்கு உழவுகோல்.



# தமிழரும் தாய்மொழியும்.*

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல், இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை, உண்மை,
வெறும் புகழ்ச்சி யில்லை;
ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்; ஒரு சொற் கேளீர்!
சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்! பாரதியார்.

ஒரு தேசத்தில் ஒற்றுமையை வளர்ப்பதற்கு "தேசம்" "பாஷை" என்னும் இரண்டில், தேசமே முதன்மை பெற்றிருப்

* இவ்வியாசம் "ஏலவிவசாயி" யின் ஆசிரியரால் எழுதப்பட்டு சென்னை "நவசக்தி" என்னும் வாரப் பத்திரிகையில் சென்ற ஜூலை 8, 15உ களில் வெளியிடப்பட்டது.

பினும், தேசப்பற்றிற்கு அடிப்படை தாய்மொழிப் பற்றே. எச்சாதியராயிருப்பினும், எம்மதத்தினராயிருப்பினும் பாஷையே ஒற்றுமையுறைய நிலை நாட்டும். பாஷையின்றித் தேசமில்லை, மதமில்லை, சமூகமில்லை. 'பாஷை என்பது சரீரத்தின்மேல் அணியப்படும் ஆடையன்று. அது சரீரத்தின் முக்கிய பாகமாகிய மேல் தோல். அதை இஷ்டம்போல் கடன் வாங்கி அனுபவிப்பதென்பது இயலாது. அதை நினைத்தபோது கழற்றி வீசி விடுவது என்பது சாத்யமன்று. நாகரீகமும், அறிவு வளர்ச்சியும் பாஷையை ஆதாரமாகக் கொண்டுள்ளன." என்று ஓர் அறிஞர் கூறுகிறார். ஒரு தேசத்தில் தேசிய உணர்ச்சி அதிகம் ஏற்படவேண்டுமானால், அத்தேசத்தில் பாஷை உணர்ச்சி அதிகம் ஏற்படல்வேண்டும். அறிவின் அபிவிருத்திக்கும், ஆத்மீக அபிவிருத்திக்கும், சன்மார்க்க வளர்ச்சிக்கும், ஏதோ ஒரு ஜீவனத்திற்கும் உபயோகமாகும் பொருட்டு ஆதியில் நம் நாட்டில் கல்வி கற்றார்களேயன்றி, கற்பிக்கப்பட்டார்களேயன்றி, தற்காலத்தைப்போல் வயிறு வளர்ப்பதற்காக மட்டும் கல்வி கற்கவில்லை. பாஷாபிமானம் இரத்தத்தில் ஊறி விடுகிறது. இளமை முதற்கொண்டு ஆங்கிலம் ஆழ்ந்து பயின்று, ஆங்கில நாகரீகத்தில் மூழ்கியிருக்கும் ஒரு தமிழனைத் திடீரென்று பலமாய்த் தாக்கினால், "ஐயோ" என்று தமிழில் தான் கத்துவாரேயன்றி, ஆங்கிலத்தில் "Alas! my God, Help me" (ஐயோ! கடவுளே, என்னைக் காப்பாற்று) என்று கூவமாட்டார். ஒவ்வொரு தேசத்தாரை அவர் பேசும் மொழியால் அழைப்பது வழக்கம். தமிழைத் தாய்ப்பாஷையாகக் கொண்டு தமிழில் பேசுவதாலல்லவோ, நாமும் தமிழர் என்று அழைக்கப்படுகிறோம். ஒரு விஷயத்தை அயல் மொழியின் மூலமாக அறிவதைக் காட்டிலும், சொந்த பாஷையின் வழியாக அறிவதே இலகுவாயிருக்கும், இன்பமாயிருக்கும். பண்டைத் தமிழரசர்களும், தமிழர்களும் மொழிப்பற்றுக்கொண்டு, எவ்வளவு தூரம் தமிழை வளர்த்திருக்கிறார்கள்? மதுரைத் தமிழ்ச் சங்கம் எவ்வாறு ஆதரிக்கப்பட்டது? தமிழ் நாட்டின் அருந்தனமாகிய நாயன்மார்கள், கடவுளிடம் காட்டிய ஆழ்ந்த அன்பின் அடையாளமாக, ஆழ்வார்கள் அகத்திலிருந்து பொங்கிப் புரண்டு புறப்பட்ட அளவற்ற அன்பின் அடையாளமாக அவர்கள் இறைவனுக்கு இட்ட தண் தமிழ்ப் பாமாலைகள் இன்றளவும் வாடாது நிலைத்து நின்று தமிழகமெங்கும் மணந்து கொண்டிருக்கின்றன.



" கல்வி சிறந்த தமிழ்நாடு— புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு— நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின் மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு"

என்று பாரதியார் தமிழ் நூல்களின் உயர்வைக் கொண்டே தமிழ் நாட்டைப் புகழ்கிறார். எந்நாட்டில் பாஷாபிமானம் கொழுந்து விட்டெரிகிறதோ, அந்நாட்டில் நூற்களும், கலைகளும் கணக்கற்று உண்டாவதைக் காணலாம். நம் நாட்டின் வேதாந்திகள், சித்தாந்திகள், இன்னும் அநேக கலை ஞானிகள் கண்ட உண்மைகளையெல்லாம் ஆதியில் நமது தாய்ப் பாஷையிலேயே எழுதி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்கள். பண்டைத் தமிழர் நாகரீகத்தின் நிலையை உள்ளபடி ஆராய்வதற்குத் தமிழின் ஆதரவின்றிப் பிறமொழியினால் முடியுமா? முடியாது; முடியாது. எல்லா நாட்டினர்களும், எல்லா மதத்தினர்களும், எல்லாப் பிரிவினர்களும் எல்லா வயதினர்களும், எல்லாக் காலத்தவர்களும் ஒப்புக்கொள்ளக்கூடிய தமிழ் வேதமாம் திருக்குறளை உலகத்திற்குக் கொடுத்திருக்கிறது தமிழ் நாடு என்ற பெருமை "தமிழ்" என்ற பதம் உலகத்தில் இருக்கும் வரை அழியாதது. தமிழ் இல்லாவிட்டால் நாயன்மார்கள் இல்லை, ஆழ்வார்கள் இல்லை, வள்ளுவர் இல்லை, ஔவை இல்லை, இளங்கோவடிகள் இல்லை, கம்பரில்லை, தமிழர், நாகரீகமேயில்லை, தமிழர் கலைகள் இல்லை. சொந்த பாஷை இல்லாவிட்டால், என்ன தான் இருக்கும்! சுருங்கச் சொன்னால், ஒன்றுமே போற்றுவதற்குரியது இராது, இராது. பண்டைப் பெருமையைப் பன்னிப் பன்னிப் பல பல பகருவதிற் பயனொன்றுமில்லையே.

கிறிஸ்து பிறப்பதற்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னமே இருந்த சில நாகரீகச் சின்னங்கள் ஓரிடத்தில் நம் தேசத்தில் கண்டு பிடிக்கப் பட்டிருக்கிறதாக அறியப்படுகிறது. நமது நாடும், பாஷையும் புராதனமானவை. இன்னும் அவைகளைத் தெய்வீகத் தன்மைவாய்ந்ததெனப் போற்றுகிறோம். புதிதாக விருத்தியான அமெரிக்கா, ஆஸ்திரேலியா முதலிய கண்டங்களில் புதிதாகக் குடியேறிய ஐரோப்பியர்களால் ஆதியில் பேசப்பட்ட இப்பொழுதும் அதிகமாகப் பேசப்படுகிற ஆங்கில பாஷையே அத்தேசிய வளர்ச்சிக்கும், இயற்கை வளர்ச்சிக்கும் ஒவ்வாமலிருக்கும்பொழுது, பண்டை நாகரீகம் உயிருடனிருக்கும் தமிழகத்தில் ஆங்கிலேயருடைய பாஷையும், நாகரீகமும் எங்ஙனம் பொருத்தமுள்ளதாயிருக்கும்? நமது அறிவைப் பெருக்க இங்கிலீஷ் மூலமான போதனை எள்ளளவும ஏற்றதன்று என்பதை எவரும் மறுக்க முடியாது. இதன் உண்மையான தத்துவத்தைக் கண்டு, தேசபாஷையின் மூலம் கல்வி புகட்ட வேண்டுமென அநேகர் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். தாய் மொழி மூலம் கல்வி கற்பிக்கப் பட்டிருந்தால், நமது தேச சரித்திரமே வேறு விதமாக மாறியிருக்கும்.

தமிழ்ப் பாஷையின் தற்கால நிலைமையைச் சற்று கவனித்துப் பார்ப்போம். சமஸ்கிருதம் கலவாத தனித் தமிழில் பேச வேண்டும், நூற்களை வாசிக்க வேண்டும், எழுத வேண்டும் என்று வாதாடுகிற சிலரும், உலகத்தின் மாறுபாட்டையும், காலத்தின் வேகத்தையும் கவனியாது, வெறும் இலக்கிய இலக்கணத்தைமட்டும் படித்து விட்டு, இந்தியாவின் வடக்கு எல்லை எது என்று என அறியக்கூடிய அவ்வளவு பொது அறிவு கூட அடையாத சிலரும் ஒருபக்கம் தமிழின் அபிவிருத்தியைக் கெடுத்துக் கொண்டிருக்க, சர்க்காரும், தமிழுக்குத் தக்கபடி ஆதரவு அளியாது, நம் நாட்டுக் கல்வி நெகிழவிட்டு, ஆங்கிலத்தை அரசாங்க பாஷையென்று அதிகமாக ஆதரித்ததின் பயனைத் தமிழ் நன்கு மதிக்கப்பட வில்லையாகையால் ஆட்சிபுரிவோரும் இன்னொருபக்கம் கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஓர் ஏவ



லாள் வேலை பார்க்கச் சென்றாலும், "எஸ், சார்," "நோ, சார்" என்ற வாக்குகளை ஆங்கிலத்தில் அவசியம் அறிந்திருக்க வேண்டியிருக்கிறபடியால் மாணவர்களும் ஆங்கிலத்தில் அதிமோகங் கொண்டு, அதை ஆவலுடன் கற்கத் தொடங்கி, அநேகர் ஆங்கிலத்திலும், தமிழிலும் தக்க பயிற்சியில்லாது, அலங்கோலமான விதமாய்ப் பேசியும் எழுதியும் வருகிறார்கள். தேச பாஷையில் பேசுவதும் எழுதுவதும், வாசிப்பதும் அகௌரவமென்று நினைப்போர் நம்மில் அநேகர் இல்லாமலில்லை. ஜப்பான் தேசத்தில் பெரிய மேதாவிகள் தங்களுடைய சொந்த பாஷையில் வெளிவரும் வர்த்தமானப் பத்திரிகைகளையே அதிகமாக வாசிக்கிறார்களாகையால், அங்கு தேச பாஷை அதிக உரம் பெற்று உண்டாகிக்கொண்டு வருகிறது. தமிழில் வாசிப்பது கேவலம் என்று நினைக்கும் மனிதர்கள் தாய் மொழியை வளர்க்கா விட்டாலும், அதை நாசப்படுத்திக் கொண்டிருக்கிறார்களென்று ஏன் சொல்லக்கூடாது? மத ஸ்தாபகர்களான இயேசு நாதர், முகம்மது நபிநாயகம், புத்தர், சங்கரர், இராமானுஜர் முதலியோர்கள் பேசியதும் அவரவர்களுடைய தாய்ப்பாஷையிலேயே. புத்தரை சில பிராமணர்கள் சமஸ்கிருதத்திலேயே பேசவேண்டும், எழுதவேண்டும் என்று கேட்டுக்கொள்ள, "பொது ஜனங்கள் எல்லாரும் அறிந்திருக்கும் பாஷையிலேயே பேசுவேன்." என்றார். வள்ளுவரை, ஔவையை, இளங்கோவடிகளை, நாயன்மார்களை, ஆழ்வார்களை, கம்பரை, வில்லிப்புத்தூரரை, புகழேந்தியை அறியாது, ஷேக்ஸ்பியர், மில்டன், வோட்ஸ்வொர்த், டென்னிஸன் முதலிய ஆங்கிலக் கவிகளை அறிந்து, ஆனந்திக்கும் மாணவர்கள் தமிழ் நாட்டில் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்! காலத்தின் கொடுமையால், கோலத்தால் தமிழில் எண்ணுவதைக்கூட சிலர் மறந்து அயல் பாஷையில் எண்ண ஆரம்பித்திருக்கிறார்கள்.

தமிழ் நாட்டில் பிறந்து, தமிழைத் தாய் பாஷையாகப் பேசித் தமிழ் பயின்று, தமிழபிமானம் பூண்ட தமிழ் மக்கள் பலிருப்ப, அந்நிய நாடுகளில் பிறந்து, அந்நிய பாஷைகளில்

மழலைப் பேச்சுகள் பேசி, அவைகளைப் பயின்று, பின் நமது தேசம் வந்து, தமிழ் கற்று, தமிழில் பல புஸ்தகங்கள் எழுதியும் சில அரிய நூற்களை அவர் தம் பாஷைகளில் மொழி பெயர்த்திருக்கும் கிறிஸ்தவ மதபோதர்களான பெஸ்கி (வீரமாமுனிவர்), கால்ட்வெல், வின்ஸ்லோ, போப், பாப்லி முதலியோர்களின் அருஞ்செயல்கள் நமக்கு நல்ல பாடங்களல்லவா? தமிழராகிய நாமே கண்டு ஆச்சரியப் படும்படியாக பிரான்ஸ் தேசத்தில் ஒருவர் தமிழில் அவ்வளவு பாண்டித்தியத்துடன் விளங்குகின்றாராம்.

இப்பொழுது அதிதீவிரமாக முன்னேறிக் கொண்டிருக்கும் நாடுகளான இங்கிலாந்து, ஐரோப்பாவிலுள்ள பலதேசங்கள், ஐக்கிய இராஜ்யங்கள், ஜப்பான் முதலிய தேசங்கள் நல்ல புகழ் பெறுவதற்குக் காரணம் அவர்களுடைய பாஷாபிமானமே. ஜப்பானியர்கள் ஐரோப்பிய நாகரிகத்தை அதிகமாகப் பின்பற்றிய போதிலும், ஜப்பானிய சர்வ கலாசாலைகளில் தேச பாஷையை அதிகமாக உபயோகப்படுத்துகிறார்கள். நமக்குக் கொடுக்கப்படும் கல்வி முறை மாற்றப்பட்டாலன்றி, தமிழ் தக்கபடி தழைக்காது. இந்தியாவில் தப்பித்தவறி இயற்கையாகவோ, வரப்பிரசாதத்தாலோ, சுய முயற்சியாலோ வெளிவரும் சிலரையுங்கூட நமது சர்வ கலாசாலைகள் அறியாது கிடக்கின்றன. ஆசியாக் கண்டத்தின் ஆஸ்தான வித்துவானான நமது ரவீந்திரரை, புல், பூண்டுகளுக்கும் உயிருண்டு, உணர்வு உண்டு என்று உலகிற்கு விளக்கிக்காட்டிய அறிஞர் ஜகதீச சந்திர வஸுவை (Bose) ரசாயனசாஸ்திரத்தில் இந்தியரில் உயர்வாக விளங்கும் தியாகியாம் ஆசிரியர் பிரபுல சந்திர ராயை, கணித சாஸ்திரத்தில் அகிலமெங்கும் பேர் பெற்றிருக்கும் கேம்பிரிட்ஜ் கலாசாலை மெச்சிய விற்பனர் காலஞ்சென்ற இராமானுஜத்தை ஆழ்ந்து அறிய அவாவில்லாத நமது சர்வ கலாசாலைகளின் நிலையை எவ்வாறு விவரிப்பேன்! நமது நாட்டின் சில மேதாவிகளை அயல் நாட்டார் அறிந்து, அவர்களைப் பல தேசங்களுக்கு அறிமுகம்



செய்து, உற்சாகமளித் திருக்கிறார்கள். ஏறக்குறைய 20 வருடங்கள் வரைகூட மறந்து போக முடியாத அவ்வளவு ஒரு பெரிய அறிஞரையேனும் இதுவரை நமது சென்னைச் சர்வ கலாசாலை உண்டாக்கி யிருக்கவில்லையே. கேவலம்! கேவலம்!!

மகரிஷி தேவேந்திரநாத தாகூர் தமது ஜீவிய சரித்திரத்தையும், "வந்தேமாதரம்" என்ற வார்த்தையை உண்டாக்கிய பங்கிம் சந்திர சாட்டர்ஜி, தேசாபிமானம் தக தக வென்று கொழுந்து விட்டெரியும் அவருடைய நாவல்களையும், லோகமான்ய பாலகங்காதர திலகர் தமது ஒப்பற்ற "கீதா ரகஸியத்"தையும் தம் தம் தாய் மொழிகளிலேயே எழுதி விட்டுச் சென்றார்கள். கவி ரவீந்திரர், தாம் இயற்றும் நூல்களை வங்காளத்திலும், சர் வஸு (Bose) தாம் கண்டறிந்த நுட்பங்களைத் தாய்பாஷையிலும், காந்தி அடிகள் தமது ஜீவிய சரித்திரத்தை தமது தாய் பாஷையிலுமாக அவரவர் மொழிகளிலேயே எழுதுகிறார்கள். அவ்விதமே சிலர் ஆங்கிலத்தில் அதி அறிவாளிகளாயிருந்தும், சொந்த பாஷைகளிலேயே அநேக நூல்கள் இயற்றுகிறார்கள். உலகம் போற்றும் சிலமேதாவிகள் தாய்பாஷைகளை மட்டும் அறிந்திருக்கிறார்கள். இதற்குச் சான்று ஐரோப்பாவிற்கு மகாத்மாகாந்தி அவர்களை அறிமுகம் செய்து வைத்து, அவரை தமது நூலின் மூலமாக அதிகமாக அறியும்படி செய்த பிரான்ஸ் பெரியார் ரோமன் ரோலண்டுதான்.

தமிழ் பாஷையின் தற்கால நிலையைக் காண பாஷைப் பற்று, தேசப்பற்று உடைய எவரும் வருந்தாமலிருக்க முடியாது. தேசாபிமானம் ஓங்கி வளர்வதற்குப் பாஷாபிவிருத்தியே ஒரு முக்கிய கருவியென்று தலைவர்கள் அடிக்கடி பல்லவி, அனுபல்லவிகளுடன் பாடிக்கொண்டிருந்தாலும், செய்கையில் தீவிரமாகக் காட்டுவோரைக் காணோம். ஏதோ சிலர், எங்கோ சிலர் இல்லாமலில்லை. 900 ஆண்டுகளுக்கு முன் உண்டான பாஷையாயிருப்பினும், ஒரு சிறிய தேசமாயிருப்பினும், சுமார் 15 வரு

ஷங்களாக பாஷாபிமானிகளின் ஊக்கத்தால், உழைப்பால் மலையாள பாஷை எவ்வளவு விருத்தியடைந்திருக்கிறது ! இரத்தினங்கள் போன்ற நவ நவமான அன்னிய நூற்களை மொழிபெயர்த்து, இலக்கியத்தைப் பெருக்கியிருக்கிறார்கள் மலையாளிகள். தெலுங்கு அபிவிருத்திக்காக எவ்வளவு பாடுபட்டார்கள், பட்டுக் கொண்டிருக்கிறார்கள் ஆந்திரர்கள்; ஏராளமான நூற்கள் அங்குக் குவிந்து கொண்டிருக்கின்றன. பூணூலைப் பூணு நூல் என்று சொல்லி, எடுத்து வீசி எறிந்த பண்டித வீரேசலிங்க பந்துலு எவ்வளவு எழுதிப் புஸ்தகப் பொக்கிஷத்திற்குத் தெலுங்கில் உதவியிருக்கிறார் ! வங்கபாஷையின் விருத்தியோ வேகம், வேகம். இவ்வாறு நம் தேசத்தின் ஒவ்வொரு பாஷையைப் பற்றியும் எழுதலாம், பேசலாம். ஆவதென்ன ? தமிழ் தளர்ச்சியுற்றிருப்பதைக் கண்டு வருத்த முண்டாகும். மற்ற பாஷைகளின் அபிவிருத்தியைக் கண்டு ஆத்திர முண்டாகும். உண்மையில் உண்டாக வேண்டியது பாஷாபிமானமே, பாஷையில் வெறியே.

மதுரைத் தமிழ்ச் சங்கம் இப்பொழுது எப்படியிருக்கிறது ? காலஞ்சென்ற ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவரில்லாவிட்டால் தமிழ்ச் சங்கம் என்று பெயரளவில் கூட இல்லாது போய் விடும். பண்டைக் காலம் பார்த்த தமிழ்ச் சங்கமா, முத்தமிழ் வளர்த்த தமிழ்ச் சங்கமா, உலகம் போற்றும் திருக்குறளை ஏற்ற சங்கமா, "நெற்றிக் கண் திறந்தாலும்........." என்று சோமசுந்தரக் கடவுளை நோக்கி அஞ்சா நெஞ்சத்துடன் குற்றம் சாட்டித் தாக்கிய நக்கீரரை உண்டாக்கிய சங்கமா இது என்று ஆச்சர்யமும், வருத்தமும் உண்டாகின்றன.

நம்மிடையில் உண்மையுடன், உறுதியுடன் பாஷாபிமானம் உண்டாகியிருந்தால் வள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஔவை, மதனலீலையார், ஆண்டாள் போன்ற அநேகம் அரிய பெரிய அறிஞர்கள், பண்டிதர்கள் உண்டாகியிருப்பார்கள், அவர்கள் அநேக வழிகளில் உழைத்து



நாட்டிற்கு நலம் செய்திருப்பார்கள். அப்பெரியார்கள் பல, அரும் நூற்களை ஆக்கியிருப்பார்கள். அநேக தொழில்கள் வளர்ந்திருக்கும். நூல்களும் உண்டாகியிருக்கும். தமிழ்நாடு உலகத்திற்கு தமிழர் நாகரீகத்தை, கலைகளை, தத்துவங்களைப் போதித்திருக்கும்; உலகம் தமிழின் உயர்வை அறிந்திருக்கும்; மதித்திருக்கும். தெய்வீகம் வளர்ந்த தமிழ் நாட்டில், அன்பு பொங்கிப் புரண்ட தமிழ் நாட்டில், வீரம் செறிந்த தமிழ் நாட்டில், செல்வங்கள் யாவையும் படைத்த தமிழ் நாட்டில் தமிழ் மணம் சதா வீசிக்கொண்டிருக்கும். பாஷை சுயாதீனம் பெற்று விளங்கும். பற்பல பத்திரிகைகள் வெளிவந்து உலாவிக் கொண்டிருக்கும். பாமர ஜனங்களில் பலர் படித்துப் பண்டிதர்களாக விளங்கியிருப்பார்கள். சுருங்கச் சொன்னால் தமிழகத்திலுள்ள ஒவ்வொருவரும் தமிழ் பயின்று, தமிழர் உணர்வு பெற்று, தமிழர் நாகரீகம் அடைந்து, ஜாதிப் பூசல்களின்றி, தமிழர்கள் ஒன்றுபட்டு உண்மை வீரத் தமிழர்களாய் வாழ்ந்திருப்பார்கள்.

நம்முள் பாஷாபிமானம் என்னும் மணிச்சுடர் உற்சாகமென்னும் தைலமின்மையால் மங்கி யொளிர்வதை ஊக்கம் என்னும் தூண்டு கோலால் தூண்டிவிட்டு அதை வளர்ப்போமாக. தமிழர் தம் தவப்பயனால் ஸ்ரீயுத சுப்ரமண்ய பாரதியார் நமதிடையில் தோன்றி,

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே"

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம்......" என்பவைபோன்ற தம் அரிய ஆவேசப் பாக்களால் தேசாபிமானம், பாஷாபிமானம் என்னும் இன்பத்தே னூற்று என்றும் வற்றாது கசிந்து ஊறிப்

பொங்கித் ததும்புமாறு, செய்து விட்டுச் சமீபத்தில் காலஞ்சென்றது எவரும் அறிந்த விஷயமாகும். அவர் தம் வேலையால்-ஜீவசக்தியால்தான் தமிழகத்தில் பாஷாபிமானம் தலைகாட்டத் தொடங்கியிருக்கிறது; தேசாபிமானமும் ஒக்க ஆரம்பித்திருக்கிறது. தமிழ்நாட்டில் தமிழ்த் தொண்டர்கள் பலர் தோன்றல் வேண்டும். உண்மைத்தொண்டர்கள் நூறு பேர் மட்டும் தீவிரமாக வேலை செய்தால் அற்ப காலத்தில் அபாரமாக வேலை செய்து விடலாம். தமிழ் நாடெங்கும் ஒவ்வொரு ஊரிலும் தமிழ்ச் சங்கம் ஏற்படுத்த வேண்டும். புஸ்தகங்கள் பலவற்றைச் சேகரித்து ஊர்கள் தோறும் புஸ்தகசாலைகள் ஸ்தாபிக்க வேண்டும். பத்திரிகைகளை, முக்கியமாக நாட்டிற்கு நன்மைசெய்யும் பத்திரிகைகளை ஆதரித்து, ஒவ்வோர் இடங்களிலும் வாசக சாலைகள் திறக்க வேண்டும். ஒருவர் விலைக்கு வாங்கிப் படிக்கத்தக்க ஆஸ்தி உள்ளவராயிருப்பினும், அந்தஸ்து உள்ளவராயிருப்பினும், பிறர் கஷ்டப்பட்டு வாங்கிய புஸ்தகங்களை இரவலாக வாங்கி வாசிக்கும் துர்ப்பழக்கம் நம்மில் வேரூன்றிக் கிடப்பதால், புஸ்தக ஆசிரியர்களை, அவர்கள் எழுதும் நூற்களை வாங்கி ஆதரித்து, இன்னும் புதிய, புதிய நூற்கள் எழுதும்படி உற்சாகிக்க வேண்டும். செல்வவந்தர்கள் நாடெங்கும் தமிழ்க் கலாசாலைகள், பள்ளிக்கூடங்கள் திறக்கவேண்டும். தமிழில் அநேக பரீட்சைகள் ஏற்படுத்த வேண்டும். மாணவர்களுக்குத் தேசப்பற்றும், பாஷைப்பற்றும் பற்றி எரியும்படியான முறையில் ஆரம்ப ஆசிரியர்களும், மற்ற ஆசிரியர்களும் அதிக கவனம் செலுத்திப் போதிக்கத்தக்க விதம் ஏற்பாடு செய்யவேண்டும். பல பாடப் புஸ்தகங்கள் தமிழில் எழுதப்பட வேண்டும். தமிழாசிரியர்களுக்குத் தக்கபடி சம்பளம் கொடுக்க முயலவேண்டும். பல பிரசங்கங்கள் தமிழில் நடைபெறும்படி செய்யவேண்டும். தமிழறிந்த நண்பர்கள் எல்லாரும் தமிழிலேயே கடிதங்கள் எழுதும் பழக்கத்திற்கு வரவேண்டும்.

அயல் மொழிகளிலிருந்து அநேக நூல்கள் மொழிபெயர்க்க வேண்டும். நமது அருமை நூல்களையும் அன்னிய மொழிகளில் மொழிபெயர்க்க ஏற்பாடுகள் செய்யவேண்டும். புத்தம் புது நூல்களைத் தமிழில் எழுதுவோருக்குத் தக்கபடி ஆதரவு அளிக்கவேண்டும். பூத, பௌதிக சாஸ்திரங்களைப் பற்றித் தமிழில் முதனூல்கள் எழுதவேண்டும். வறுமையால் வாடும் தமிழ் வித்துவான்களுக்கு அவரவர் சக்திக்குத் தக்கவாறு உதவி செய்ய முன்வர வேண்டும். "அந்த நாள் வந்திலை அருங்கவிப் புலவோய்" என்று கூறித் தனது தலையையே ஓர் வித்துவானுக்குக் கொடுக்க முன் வந்த, தமிழை உயிரென மதிக்கும் குமணச் சக்கிரவர்த்தி போன்ற அரசர்கள் இல்லாத இக்காலத்தில், தமிழ் வித்துவான்களுக்குப் பொன்னையும் பொருள்களையும் கணக்கற்றுக் கொடுத்துத், தமிழ் வளர்க்கக் கூடிய அரசர்கள் இல்லாத இக்காலத்தில், பாரி, சடையப்பர், சீதக்காதி போன்ற தமிழபிமான வள்ளல்கள் இல்லாத இக்காலத்தில், தமிழைக் காப்பாற்றுவதற்கு முற்காலத்தைப் போன்ற ஸ்தாபனங்கள் இல்லாத இக்காலத்தில், தாய்ப்பாஷையை சிலர் நாய்ப் பாஷையாகக் கருதும் இக்காலத்தில், அரசாங்கத்தார் அதற்கு ஆதரவு அளியாதிருக்கும் இக்காலத்தில், நமது தாய்பாஷையாம் தமிழபிவிர்த்திக்காக நாம் ஒவ்வொருவரும் நம்மாலான அளவு பாடு படமுன் வரவேண்டியது அவசியத்திலும் அவசியமாகவும், அவசரத்திலும் அவசரமாகவும் இருக்கிறது. தமிழர் கலைகளைத், தமிழில் தமிழர்களுக்குப் போதிப்பதற்குத் தமிழ்ச் சர்வகலாசாலையொன்று தமிழ்நாட்டில் ஸ்தாபிக்க வேண்டுமென்று தமிழ் நாடெங்கும் தீவிரமான முயற்சிகளும் கிளர்ச்சிகளும் செய்ய வேண்டும். தமிழ் மொழியும், தமிழ்க் கலைகளும், தமிழர் நாகரீகமும் ஓங்கி வளரும் பொருட்டு தமிழர் இயக்கம் தோற்றுவித்து சகல வழிகளிலும் தீவிரமாக வேலை செய்வதற்கு எல்லாத் தமிழர்களும் உடனே முன் வரவேண்டும்.

ஐயோ, அருந்தமிழே, ஐயோ செந்தமிழே, ஐயோ வேந்தால் முச்சங்கத்தில் வளர்க்கப்பட்ட முத்தமிழே, அருள் மணம் கமழும் கன்னித் தமிழே, இப்பொழுது கைவிடப்பட்ட தமிழே,

நானிறந்த தமிழே, என்ன என்ன அவமானங்களுக்கு ஆளாகப் போகிறேனோ அறிகிலேன்! தண்ணீருக்குப் பதிலாக வெந்நீர் வார்த்து வளர்க்க முயலுகின்றீர்கள்; "தமிழ்ச் சீமான்களே, இளந் தமிழர்களே, தமிழ்த் தொண்டர்களே என்னைக் காப்பாற்றுங்கள்; காப்பாற்றுங்கள்; என்னைக் காப்பது உங்கள் கடன், வாருங்கள்" என்று தமிழ்த் தாய் அழுது புலம்புவதைக் கேட்ட தமிழர் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஊக்கத்துடன், ஆக்கத்துடன் உழைத்து தமிழன்னையின் துயரைத் துடைத்துத் தமிழகத்தில் தமிழ்க் கொடி நாட்டி,

"வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே
எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே
வான் மளந்த தனைத்து மளந்திடு
வண்மொழி வாழியவே"

என்று தேசாபிமானமும் பாஷாபிமானமும் பொங்கித் ததும்பும் பாரதியாரின் வாக்குகளால் வாழ்த்தி வணங்குவோம்.

ரா. நாராயணஸ்வாமி,
ஆசிரியர்.



# ஓர் அபிப்பிராயம்.

சேலம்,
12—7—27.

அன்பிற் சிறந்த ஆசிரிய நேயரே,

....................இன்று தங்கள் "எலவிவசாயி" யைக் கண்ணுற்றுக் களிப்படைந்தேன். ................இதன் வாயிலாகத் தேசத் தொண்டையும் ஏற்றுக்கொண்ட தங்கள் பணியைப் பெரிதும் பாராட்டுகிறேன்.

இது சமயம் நம் நாட்டு விவசாயமும், கைத்தொழிலும், குடிசைத்தொழிலும், வாணிபமுமே வேண்டுவது இத்தகைய கூட்டுறவு இயக்கங்களே யாகும். இவ்வியக்கம் ஓங்காததின் காரணத்தினாலன்றோ நம் விவசாயமும், கைத்தொழிலும் குன்றி வருகின்றன. அமெரிக்காவும், ஐரோப்பாவும், ஜப்பானும் இவ்வளவு விரைவிலும், வலிவுடனும் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் பெற்றுக்கொண்டிருக்கிறது இத்தகைய கூட்டுறவுகளினாலன்றோ! அந்தோ நம் நாட்டு மக்கள் இதை எப்பொழுது அறியப்போகிறார்கள்!

இந் நாட்டில் கூட்டுறவு இயக்கங்களின் தத்துவங்களையும், இரகசியங்களையும் அறியாது நம் மக்கள் பலர் ஒரே வித வியாபாரத்தையோ, கைத்தொழிலையோ, பலர் தனித் தனியாக ஆரம்பித்துக், கட்டுப்பாடுகளுக்கு அடங்காது, ஒருவரை ஒருவர் அடக்கவோ, மோசம் செய்யவோ நினைத்துப் பல சூழ்ச்சிகளைச் செய்து, போட்டிகளைக் கையாடி, முடிவில் தனக்கு ', தன்னு

டன் சேர்ந்த மற்றவர்களுக்கும் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் கொண்டுவந்து விடுகிறார்கள்.

இதைச் சீர் திருத்தித் தக்க வழிக்குக் கொண்டுவந்து, நாட்டின் வறுமையை அகற்றுவது தேச சேவைகளுள் மிகவும் முக்கியமானதாகும். இதனால் நாட்டின் செல்வம் வளரும்; செல்வம் உயர்ந்தால், வாணிபமும், கைத்தொழிலும், சுதந்திர உணர்ச்சியும், மற்றவைகளும் வளர்ந்தோங்கும். இவைகளுக்கெல்லாம் அடிப்படை தாங்கள் இது சமயம் மேற்கொண்டிருக்கும் உத்தமத் தொண்டேயாகும். இத்தகைய கூட்டுறவு வியாபாரங்களும், விவசாயங்களும், அவைகளின் சார்பாக அவர்களுக்கு நல்லெண்ணங்களையும், ஒற்றுமையையும், நன்முயற்சிகளையும் புகட்டப் பத்திரிகைகளும் ஆங்காங்கு தோற்றுவிக்கக் கடவுள் அனுக்கிரகிப்பாராக.

தங்கள் "ஏல விவசாயி" மென்மேலும் விருத்தி யடைந்து ஏல விவசாயிகளுடைய ஆதரவை அதிகமாய்ப்பெற்று, நீடூழி வாழுமாறும், அதனைத் திறம்பட நடத்தத் தங்களுக்குத் திடகாத்திரமும், நீடிய ஆயுளுங்கொடுக்குமாறும் கடவுளைப் பணிவுடன் பிரார்த்திக்கிறேன்.

தங்கள் நண்பன்,
வை. நடேசன்.



# ஏலம்.

## இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட விபரம்.

### 1927—1926 வருடங்கள்.

| | தேசங்களுக்கு | 1927. பவுன்கள். | 1926. பவுன்கள். |
|---|---|---|---|
| 1. | கிரேட் பிரிட்டன் .... | 29,681 | 37,383 |
| 2, | பெல்ஜியம் ... | | 560 |
| 3. | பிரான்ஸ் .... | | 2,474 |
| 4. | ஜெர்மனி ... | 11,121 | 6,718 |
| 5. | ஹாலண்டு ... | 1,120 | 1,120 |
| 6. | டென்மார்க் .... | 8,116 | 8,110 |
| 7. | நார்வே .... | 3,310 | 6,411 |
| 8. | ஸ்விடன் ... | 10,450 | 3,460 |
| 9. | ஐரோப்பாவிலுள்ள மற்ற தேசங்கள் | 4,704 | 1,802 |
| 10. | ஆஸ்டிரேலியா ... | 56 | |
| 11. | ஐக்கிய மாகாணங்கள் ... | 2,450 | 15,383 |
| 12. | எஜிப்டு .... | 3,504 | 10,872 |
| 13. | ஆப்பிரிக்கா .... | | 170 |
| 14. | மடகஸ்கார் .... | 88 | |
| 15. | இந்தியா .... | | 357 |
| 16. | ஸ்ட்ரெயிட் .... | 160 | 345 |
| 17. | ஜப்பான் .... | 4,240 | 860 |
| 18. | ஆசியாவிலுள்ள மற்ற தேசங்கள் | 1,556 | 2,918 |

## ஏலம்.

### இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட புள்ளி விபரங்கள்.

(A) 1913—1914.

| துறைமுகங்கள். | | | ராத்தல். |
|---|---|---|---|
| 1. பம்பாய் | ... | ... | 1,91,769 |
| 2. கல்கத்தா | ... | .... | 63,905 |
| 3. தூத்துக்குடி | .... | .... | 55,915 |
| 4. கள்ளிக்கோட்டை | ... | ... | 19,732 |
| 5. தலைச்சேரி | .... | ... | 17,362 |
| 6. மங்களூர் | .... | ... | 12,639 |

### இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட

(B) ஏலத்தின் அளவும் மதிப்பும்.

| வருடம். | அளவு. ராத்தல் (நிறுவை) | மதிப்புக் கிரையம். பவுன் |
|---|---|---|
| 1913—14 | 3,73,401 | 49,994 |
| 1914—15 | 4,13,135 | 54,369 |
| 1915—16 | 4,82,764 | 45,597 |
| 1916—17 | 3,11,790 | 32,400 |
| 1917—18 | 8,93,186 | 80,221 |
| 1918—19 | 6,41,650 | 51,605 |



## திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்,
## போடிநாயக்கனூர்,
தலைமைஸ்தாபனம்.

### நிர்வாக சபை.

அக்ராசனாதிபதி.

1 மகா-ா-ா-ஸ்ரீ கனம் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார், போடிநாயக்கனூர்,

போஷகர்.

2 „ „ ராவ் சாகிப் A.S. அழகணன் செட்டியார் அவர்கள், சேர்மன், முனிசிபல் சபை, போடிநாயக்கனூர்.

உப அக்ராசனாதிபதி.

3 „ „ தி. எ. திருமலை சுப்பு செட்டியார் அவர்கள் சேர்மன், யூனியன் போர்ட், கோம்பை.

பொக்கிஷதார்.

4 „ „ R. கந்தஸ்வாமி செட்டியார் அவர்கள்.

காரியதரிசி.

5 „ „ S. பொன்னப்பன் செட்டியார் அவர்கள்.

உப காரியதரிசி.

6 „ „ A. M. காலே ராவுத்தர் அவர்கள்.

## மற்ற நிர்வாக அங்கத்தினர்கள்.

(போடிநாயக்கனூர் கிளையிலிருந்து)

7 மகா-ா-ா-ஸ்ரீ கனம் வ. குலசேகர பாண்டிய நாயக்கர் அவர்கள்
8 ,, ,, K. பண்டாரி செட்டியார் அவர்கள்.
9 ,, ,, C. S. குருஸ்வாமி செட்டியார் அவர்கள்.
10 ,, ,, ம. ரா. மல்லையன் செட்டியார் அவர்கள். (மணியம்பட்டி)
11 ,, ,, ம. அன்னதானப்பெருமாள் செட்டியார் அவர்கள் (சில்லமரத்துப்பட்டி)
12 ,, ,, S. P. உசன்கான் ராவுத்தர் அவர்கள்.

(கம்பம் கிளையிலிருந்து)

13 ,, ,, சி. அ. முகம்மது மக்தூம் ராவுத்தர் அவர்கள்
14 ,, ,, ம. சி. சுப்பையன் செட்டியார் அவர்கள்.
15 ,, ,, N. K. P. P. ராவுத்தர் அவர்கள்.
16 ,, ,, C. V. முத்துஸ்வாமி அய்யர் அவர்கள்.
17 ,, ,, ரா. தி. ராமஸ்வாமி கவண்டர் அவர்கள்.
18 ,, ,, பொ. நாகூர் மீரா ராவுத்தர் அவர்கள்.
19 ,, ,, கா. கோ. தி. கோனேரி திருமலைப்பிள்ளை அவர்கள்.
20 ,, ,, கா. கா. கிருஷ்ணஸ்வாமி கவண்டர் அவர்கள் (காமயகர்)
21 ,, ,, கா. சு. கதிரைய கவண்டர் அவர்கள்.

(தேவாரம் கிளையிலிருந்து)

22 ,, ,, T. K. நாகையஸ்வாமி நாயக்கர் அவர்கள்.
23 ,, ,, M. ராமுபிள்ளை அவர்கள்.
24 ,, ,, ஒ. வெ. ஒன்னுராமு செட்டியார் அவர்கள்
25 ,, ,, ஒ. ரா. கொண்டிலு செட்டியார் அவர்கள்



26 மகா-ா-ா-ஸ்ரீ கனம் ஆ. வி. பொன்னப்ப நாடார் அவர்கள்.
27 ,, ,, லோ. சிவமுருகபிள்ளை அவர்கள்.
28 ,, ,, தி. ரங்கஸ்வாமி நாயக்கர் அவர்கள்.
29 ,, ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்.
30 ,, ,, C. சங்கரலிங்கம் அவர்கள்.

(கோம்பைக் கிளையிலிருந்து)

31 ,, ,, வ. ஸ்ரீராமன் செட்டியார் அவர்கள்.
32 ,, ,, தா. சுப்பையாபிள்ளை அவர்கள்.
33 ,, ,, தே. தொட்டண்ண கவண்டர் அவர்கள்.
34 ,, ,, B. S. போமு செட்டியார் அவர்கள். (பணப்புரம்)
35 ,, ,, வாவாசா மஸ்தான் ராவுத்தர் அவர்கள். (உத்தமபாளையம்)
36 ,, ,, க. வெ. திருமலையன் செட்டியார் அவர்கள்
37 ,, ,, A. D. ராஜு பிள்ளை அவர்கள்.
38 ,, ,, உ. ம. சே. முகையதீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள்

---

## திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்
## விற்பனைக் கமிட்டி அங்கத்தினர்கள்.

---

பிரசிடெண்டு.

1 மகா-ா-ா-ஸ்ரீ கனம் ராவ் சாகிப் அழகணன்செட்டியார் அவர்கள் போடிநாயக்கனூர்.

---

செக்ரெட்டரி.

2 ,, ,, உ. ம. சே. முகையதீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள், கோம்பை.

---

3 மகா-ா-ா-ஸ்ரீ கனம் அ. மு. காஸீம் ராவுத்தர் அவர்கள்.
போடிநாயக்கனூர்.

4 ,, ,, பொ. நாகூர் மீரா ராவுத்தர் அவர்கள்.
கம்பம்.

5 ,, ,, ம. ரா. மல்லையன் செட்டியார் அவர்கள்.
மணியம்பட்டி.

6 ,, ,, த. அ. கு. அழகர் ராஜா அவர்கள்.
தேவாரம்.

7 ,, ,, சு. வி. பொன்னப்பநாடார் அவர்கள்.
தேவாரம்.

8 ,, ,, T. R. திருமலை சுப்பு செட்டியார் அவர்கள்
கோம்பை.

9 ,, ,, கோனேரி திருமலைபிள்ளை அவர்கள்
கம்பம்.

10 ,, ,, நா. சு. கிருஷ்ணஸ்வாமிகவண்டர் அவர்கள்
காமயநகர்.

11 ,, ,, இ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்.
தேவாரம்.

12 ,, ,, C. சங்கரலிங்கம் அவர்கள்.
தேவாரம்.

---



## திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம், போடிநாயக்கனூர் கிளைச் சங்கம்.

### நிர்வாக சபை.

அக்ராசனர்.

1 மகா-ா-ா-ஸ்ரீ கனம் சின்ன ஜமீன்தார் V. குலசேகர பாண்டிய நாயக்கர் அவர்கள்.

காரியதரிசி

2 ,, ,, † S. P. உசேன்கான் ராவுத்தர் அவர்கள்.

பொக்கிஷதார்

3 ,, ,, † C. S. குருஸ்வாமி செட்டியார் அவர்கள்

மற்ற அங்கத்தினர்கள்.

4 ,, ,, S. A. ரங்கஸ்வாமி செட்டியார் அவர்கள்
5 ,, ,, † R. கந்தஸ்வாமி செட்டியார் அவர்கள்
6 ,, ,, † K. பண்டாரி செட்டியார் அவர்கள்
7 ,, ,, K. சுருளி சுப்பையன் செட்டியார் அவர்கள்
8 ,, ,, M. S. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்
9 ,, ,, † A. M. காஸீம் ராவுத்தர் அவர்கள்.
10 ,, ,, க. சையது அஹமது ராவுத்தர் அவர்கள்
11 ,, ,, V. புன்னைவனம் பிள்ளை அவர்கள்.
12 ,, ,, † S. பொன்னப்பன் செட்டியார் அவர்கள்
13 ,, ,, † S. R. பழனிச்சாமி செட்டியார் அவர்கள் (பழனிசெட்டிபட்டி)

4 „ „ செ. ம. போ. வீரபுத்திரன் செட்டியார் அவர்கள்
5 „ „ ம. அன்னதானப்பெருமாள் செட்டியார் அவர்கள் (சில்லமரத்துப்பட்டி)
6 „ „ † ம. ரா. மல்லையன் செட்டியார் அவர்கள் (மணியம்பட்டி)
17 „ „ மு. ச. சண்முகம்பிள்ளை அவர்கள் (சிலமலை)
18 „ „ Y. S. பொன்னையா நாடார் அவர்கள் (திருமலாபுரம்)
19 „ „ பொ. முத்துக்காமாக்ஷி செட்டியார் அவர்கள் (ரங்கநாதபுரம்)
20 „ „ கொ. வெள்ளையப்பன் செட்டியார் அவர்கள்

---

## ஏல விவசாயிகள் ஐக்கிய பாங்க்,
போடிநாயக்கனூர்.

---

டைரெக்டர்கள்.

---

பிரசிடெண்ட்.

1 மகா-ா-ா-ஸ்ரீ கனம் ராவ்சாகிப் அழகணன்செட்டியார் அவர்கள்

---

காரியதரிசி.

2 „ „ B. K. ஒன்னுராமு செட்டியார் அவர்கள்

---

மற்ற டைரெக்டர்கள்.

3 „ „ S. பொன்னப்பன் செட்டியார் அவர்கள்



4 மகா-ா-ா-ஸ்ரீ கனம் R. கந்தஸ்வாமி செட்டியார் அவர்கள்
5 „ „ V. புன்னைவனம்பிள்ளை அவர்கள்
6 „ „ பொ. முத்துக்காமாக்ஷி செட்டியார் அவர்கள் (ரங்கநாதபுரம்)
7 „ „ செ. அ. சுப்பையன் செட்டியார் அவர்கள்
8 „ „ ம. ரா. மல்லையன் செட்டியார் அவர்கள் (மணியம்பட்டி)
9 „ „ S. P. சுல்தான் அஹம்மது பஹர்தீன் ராவுத்தர் அவர்கள்
10 „ „ A. M. முகம்மது மீரா லெவை ராவுத்தர் அவர்கள்
11 „ „ C. M. சங்கர நாராயண அய்யர் அவர்கள்
12 „ „ வ. குலசேகர பாண்டிய நாயக்கர் அவர்கள் சின்ன ஜமீன்தார்.
13 „ „ கு. வெள்ளைச்சாமி செட்டியார் அவர்கள் (பழனிசெட்டிபட்டி)
14 „ „ செ. மு. சோ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்கள்
15 „ „ சொ. அருணாசலம் செட்டியார் அவர்கள் (ஜக்கம நாயக்கன்பட்டி)

---

## திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்,
கம்பம் கிளைச் சங்கம்.

---

நிர்வாக சபை,

---

அக்ராசனாதிபதி.

1 மகா-ா-ா-ஸ்ரீ கனம் † சி. அ. மு. முகம்மது மக்தூம் ராவுத்தர் அவர்கள்

---

உப அக்ராசநாதிபதி.

2 மகா-ள-ள-ஸ்ரீ கனம் † நா. அ. கதிரைய கவண்டர் அவர்கள்

காரியதரிசி.

3 ,, ,, நா. கோ. தி. கோனேரி பிள்ளை அவர்கள்

உபகாரியதரிசி.

4 ,, ,, V. P. ஆண்டியப்ப பிள்ளை அவர்கள்

மற்ற நிர்வாக அங்கத்தினர்கள்.

5 ,, ,, † ம. சி. சுப்பையன் செட்டியார் அவர்கள்
6 ,, ,, C. P. பெருமாள் கவண்டர் அவர்கள்
7 ,, ,, † பொ. நாகூர் மீரா ராவுத்தர் அவர்கள்
8 ,, ,, † நா. கோ. தி. கோனேரி திருமலைப் பிள்ளை அவர்கள்
9 ,, ,, கோ. பெ. வெள்ளையப்பன் செட்டியார் அவர்கள்
10 ,, ,, வெ. அழகிரிஸ்வாமி செட்டியார் அவர்கள்
11 ,, ,, P. S. S. சிக்கைய கவண்டர் அவர்கள்
12 ,, ,, T. K சுருளியாண்டி கவண்டர் அவர்கள்
13 ,, ,, † C. V. முத்துஸ்வாமி அய்யர் அவர்கள்
14 ,, ,, C. முகம்மது மீராலெவ்வை ராவுத்தர் அவர்கள்
15 ,, ,, † N. K. P. P. ராவுத்தர் அவர்கள்
16 ,, ,, சே. கா. சேக்மைதீன் ராவுத்தர் அவர்கள்
17 ,, ,, சு. அழகுமுத்துப் பிள்ளை அவர்கள்
18 ,, ,, † கா. கா. கிருஷ்ணஸ்வாமி கவண்டர் அவர்கள்
19 ,, ,, பீ. அ. முகம்மது இஸ்மால் லெவ்வை சாயபு அவர்கள்
20 ,, ,, E. B. அருணாசலம் செட்டியார் அவர்கள்



## ஏல விவசாயிகள் ஐக்கிய பாங்க்,
## கம்பம்.

டைரெக்டர்கள் சபை.

பிரசிடெண்ட்.

1 மகா-ள-ள-ஸ்ரீ கனம் சி. அ. மு. முகம்மது மக்தூம் ராவுத்தர் அவர்கள்

காரியதரிசி.

2 ,, ,, பொ. நாகூர் மீரா ராவுத்தர் அவர்கள்

உப காரியதரிசி.

3 ,, ,, கோ. பெ. வெள்ளையப்பன் செட்டியார் அவர்கள்

மற்ற டைரெக்டர்கள்.

4 ,, ,, மீ. பீர்முகம்மது ராவுத்தர் அவர்கள்
5 ,, ,, கோ. பக்கீர்முகம்மது ராவுத்தர் அவர்கள்
6 ,, ,, நா. கோ. தி. கோனேரிபிள்ளை அவர்கள்
7 ,, ,, C. P. பெருமாள் கவண்டர் அவர்கள்
8 ,, ,, நா. கோ. தி. கோனேரி திருமலைபிள்ளை அவர்கள்
9 ,, ,, T. K. சுருளியாண்டி கவண்டர் அவர்கள்
10 ,, ,, C. V. முத்துஸ்வாமி அய்யர் அவர்கள்
11 ,, ,, E. B. அருணாசலம் செட்டியார் அவர்கள்
12 ,, ,, ம. சி. சுப்பையன் செட்டியாரவர்கள்
13 ,, ,, பெ. கா. கதிர்காம கவண்டர் அவர்கள்
14 ,, ,, P. S. பாலசுப்ரமணிய கவண்டரவர்கள்
15 ,, ,, நா. அ. கதிரைய கவண்டரவர்கள்

## திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம், தேவாரம் கிளைச்சங்கம்.

நிர்வாக சபை.

பிரசிடெண்ட்.

1 மகா-ள-ள-ஸ்ரீ கனம் † T. K. நாகயசாமி அவர்கள்

வைஸ் பிரசிடெண்ட்.

2 ,, ,, † ஷ. மு. M. சாமுபிள்ளை அவர்கள்

காரியதரிசி.

3 ,, ,, † சி. ராமலிங்கம் செட்டியாரவர்கள்

உபகாரியதரிசி.

4 ,, ,, ஆ. அருணாசலம் செட்டியாரவர்கள்

பொக்கிஷதார்.

5 ,, ,, செ. வெ. கிருஷ்ணமூர்த்தி செட்டியார் அவர்கள்

6 ,, ,, † சி. சங்கரலிங்கம் பிள்ளை அவர்கள்
7 ,, ,, சா. வேலுப்பிள்ளை அவர்கள் (காலஞ்சென்று விட்டார்)
8 ,, ,, N. M. காமாக்ஷிபிள்ளையவர்கள்
9 ,, ,, † ஓ. சா. கொண்டு செட்டியாரவர்கள்



10 மகா-ள-ள-ஸ்ரீ கனம் சா. முத்துசெட்டியாரவர்கள்
11 ,, ,, † ஒ. கெ. ஒன்னாமு செட்டியாரவர்கள்
12 ,, ,, பூ. ப. வீரபத்திரன் செட்டியாரவர்கள்
13 ,, ,, தி. திருப்பதி செட்டியாரவர்கள்
14 ,, ,, சி. முத்துமாயத் தேவரவர்கள்
15 ,, ,, தி. தாசரி நாயக்கரவர்கள்
16 ,, ,, மா. சாமிப்ப நாடார் அவர்கள்
17 ,, ,, பொ. சவரிமுத்து நாடார் அவர்கள்
18 ,, ,, சி. சு. வீரபுத்திரன் செட்டியாரவர்கள் (ரங்கநாதபுரம்)
19 ,, ,, சொ. மகாலிங்கம் செட்டியாரவர்கள் (ரங்கநாதபுரம்)
20 ,, ,, க. பழனியாண்டி சேர்வை அவர்கள் (மீனாட்சிபுரம்)

## ஏல விவசாயிகள் ஐக்கிய பாங்க், தேவாரம்.

டைரெக்டர்கள் சபை

பிரசிடெண்ட்.

1 மகா-ள-ள-ஸ்ரீ கனம் சி. சங்கரலிங்கம் பிள்ளையவர்கள்

காரியதரிசி.

2 ,, ,, ஓ. சா. கொண்டு செட்டியாரவர்கள்

உப காரியதரிசி.

3 மகா-ா-ா-ஸ்ரீ கனம் வெ. பெ. மா. சாமியப்ப நாடாரவர்கள்

4 .... .... சிவமுருகபிள்ளையவர்கள்
5 .... .... சி. சாமலிங்கம் செட்டியாரவர்கள்
6 ... .... பூ. வீ. மல்லையன் செட்டியாரவர்கள்
7 ... ... பூ. சு. நாராயணசாமி செட்டியாரவர்கள்
8 ... ... செ. வெ. கிருஷ்ணமூர்த்தி செட்டியாரவர்[கள்
9 .... .... S. நடராஜித் தேவரவர்கள்
10 ... .... அ. செ. அ. குருசாமி நாயக்கரவர்கள்
11 .... ... அ. அருணாசலம் செட்டியாரவர்கள்
12 .... .... க. பழனியாண்டி சேர்வையவர்கள் (மீனாட்சிபுரம்)



ராஜாக்கள் சங்கம்,
தேவாரம்.

நிர்வாக சபை.

பிரசிடெண்ட்.

1 மகா-ா-ா-ஸ்ரீ கனம் ந. சு. பெருமாள் ராஜா அவர்கள்

காரியதரிசி.

2 " " M. K. கிருஷ்ணம ராஜா அவர்கள்

உப காரியதரிசி.

3 " " P. N. செங்கசாமி ராஜா அவர்கள்

பொக்கிஷதார்.

4 " " ம. சு. குமார்சாமி ராஜா அவர்கள்
5 " " த. அ. கு. அழகர் ராஜா அவர்கள்
6 " " பே. சு. நாரண ராஜா அவர்கள்
7 " " P. S. சுப்ப ராஜா அவர்கள்

ஆவணக்காப்பக ... சென்னை-600 008.
159606

## திருவாங்கூர் ஏல விவசாயிகள் சங்கம்,
## கோம்பைக் கிளைச் சங்கம்,
## கோம்பை.

நிர்வாக சபை.

பிரசிடெண்ட்.

மகா-ள-ள-ஸ்ரீ கனம். தெ. தொட்டண்ண கவுண்டர் அவர்கள்.
(பணப்புரம்)

வைஸ்பிரசிடெண்ட்.

2 ,, ,, வ. ஸ்ரீராமன் செட்டியார் ,,

காரியதரிசி.

3 ,, ,, T. B. கிருஷ்ணஸ்வாமி ,,

4 ,, ,, தி. ர. திருமலைசப்பு செட்டியார் ,,
5 ,, ,, N. சாமுவேல் ரைட்டர் ,,
6 ,, ,, க. ல. நல்லதம்பி செட்டியார் ,,
7 ,, ,, கி. பீ. பீர்மீராசாயப்பு ராவுத்தர் ,,
8 ,, ,, S. திருவேங்கடம் செட்டியார் ,,
9 ,, ,, க. வெ. திருமலையன் செட்டியார் ,,
10 ,, ,, A. D. ராஜூபிள்ளை ,,
11 ,, ,, தா. சுப்பையாபிள்ளை ,,
12 ,, ,, சி. மு. சுப்பைய கவுண்டர் ,,



13 மகா-ள-ள-ஸ்ரீ கனம் S. பழனிச்சாமி கவுண்டர் அவர்கள்.
(பணப்புரம்)
14 ,, ,, ம. ராமலிங்கம் செட்டியார் ,,
(பணப்புரம்)
15 ,, ,, B. S. போமுசெட்டியார் ,,
(பணப்புரம்)
16 ,, ,, ரா. கன்னைய கவுண்டர் ,,
17 ,, ,, S. ஆறுமுகம்பிள்ளை ,,
(பார்வதி எஸ்டேட்)
18 ,, ,, கா. பி. முகைய்தீன் மீரா ராவுத்தர் ,,
(சின்னமனூர்)
19 ,, ,, அ. வாவாசா மஸ்தான் ராவுத்தர் ,,
(உத்தமபாளையம்)
20 ... உ. மு. சே. முகைய்தீன் பிள்ளை ராவுத்தர் அவர்கள்.

## ஏல விவசாயிகள் ஐக்கிய பாங்க்.
## கோம்பை.

டைரெக்டர்கள் சபை.

பிரசிடெண்ட்.

மகா-ள-ள-ஸ்ரீ கனம். தி. ர. திருமலைசப்பு செட்டியார் அவர்கள்.

காரியதரிசி

2 ... உ. மு. சே. முகைய்தீன் பிள்!

சென்னை-600 028.
159606

[illegible] ...பட்டிய தரிசி

3 மகா-ா-ா-ஸ்ரீ [illegible] பாலவாசு செட்டியார் அவர்கள்.

---

| | | | |
|---|---|---|---|
| 4 | .... | வ. ஸ்ரீராமன் செட்டியார் | ... |
| 5 | ... | தா. சுப்பையாபிள்ளை | ... |
| 6 | ... | வி. கருப்பணபிள்ளை | .... |
| 7 | .... | A. D. ராஜம்பிள்ளை | .... |
| 8 | ... | N. சாமுவேல் ரைட்டர் | .... |
| 9 | ... | க. வெ. திருமலையன் செட்டியார் | .... |
| 10 | ... | ந. ல. நல்லதம்பி செட்டியார் | ... |
| 11 | .... | கே. தொட்டண்ண கவண்டர் (பணப்புரம்) | .... |
| 12 | ... | B. S. பொமு செட்டியார் (பணப்புரம்) | .... |
| 13 | .... | T. B. கிருஷ்ணஸ்வாமி (பணப்புரம்) | ... |
| 14 | .... | தி. ராமசாமி கவண்டர் (பணப்புரம்) | .... |
| 15 | ... | ரா. கன்னைய கவண்டர் (கரியணன்பட்டி) | ... |

---

† இக்குறிகள் தலைமைச் சங்க நிர்வாக மெம்பர்களைக் குறிக்கும்.

(இன்னும் தொடரும்.)